# உதயன்

சுடர் : 36 | கதிர் : 258 | வெள்ளிக்கிழமை | ஆடி 28 ஆம் நாள் 13 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## இரவிரவாகக் கூட்டம்

# நாட்டை முடக்க பல தரப்பும் அழுத்தம்

# இன்று முக்கிய முடிவு வெளிவரலாம்!

கொழும்பு, ஓகஸ்ட் 13

கொரோனாத் தொற்றின் தீவிரம் அதிகரித்துள்ள நிலையில், உயிரிழப்புக்களும் தாறுமாறாக எகிறி நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பே ஆடிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளதால் நாட்டை முழுமையாக அல்லது பகுதியளவில் முடக்குவதற்கான அறிவிப்பு இன்று வெளிவரலாம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

19 ➤

### தாறுமாறாக எகிறும் உயிரிழப்பு

## ஒரே நாளில் 156 பேரை காவு வாங்கியது கொரோனா

*தொற்றாளர் எண்ணிக்கையும் 3ஆயிரத்தை தாண்டியது*

கொழும்பு, ஓக. 13

நாட்டை முடக்காவிட்டால் நாளாந்தக் கொரோனா சாவுகள் தாறுமாறாக அதிகரிக்கும் என்ற சுகாதார நிபுணர்களின் எச்சரிக்கைகளை அரசு பொருட்படுத்தாத நிலையில் நாடு உச்சக்கட்ட அபாயத்தை நோக்கிச்

19 ➤

## வடக்கில் தொற்றால் இருவர் உயிரிழப்பு

*சாவடைந்த 3பேருக்கு கொரோனா*

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கில் கொரோனாத் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 57 வயதுடைய ஒருவரும்,

19 ➤

## வடக்கில் 301 பேருக்குத் தொற்று

*யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 123பேர்*

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு மாகாணத்தில் 301 பேர் வரையில் நேற்றைய தினம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள

19 ➤



## குடைசாய்ந்தது இ.போ.ச. பஸ்

*பலர் படுகாயம்*

யாழ்ப்பாணம், ஓக.13

வேகமாகப் பயணித்த பஸ், தடம்புரண்டு குடைசாய்ந்தது. அதில் பயணித்த பலர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து கல்லுண்டாய் வீதியில் நேற்றுக் காலை நடைபெற்றது. காரைநகரில் இருந்து யாழ்ப்

19 ➤

### கிளிநொச்சியில்

## 40 பேர்ச் காணியை விடுவித்த இராணுவம்

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்த 40 பேர்ச் காணி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது. காணி விடுவிப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. போர் முடிவடைந்ததிலி

19 ➤

## நல்லைக் கந்தன் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பம்

*யூரியூப்பில் உற்சவக் காட்சிகள் நேரலை!*

யாழ்ப்பாணம். ஓக. 13

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகவுள்ளது. காலை 10 மணிக்கு கொடியேற்றத் திருவிழா இடம்பெறும். கொரோனாத் தொற்றுக் காரண

19 ➤

## 'லாப்காஸ்' விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 13

12.5 கிலோகிராம் 'லாப்காஸ்' சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை

18 ➤

## லிட்ரோகாஸ் விலை அதிகரிக்காது

கொழும்பு, ஓக. 13

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க தீர்மானிக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். (ஒ.இ)

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

பட்டா ரக வாகனத்தின் கண்ணாடியுடன் மோதுண்டு போதனா மருத்துவ

19 ➤

## சோதனைக் கட்டணம் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக. 13

தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும்பி.சி.ஆர். மற்றும்

19 ➤



### அடாவடிக் கும்பல் அட்டகாசம்

## கல்வியன்காட்டில் கடை மீது பெற்றோல் குண்டும் வீச்சு

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணம் கல்வியன்காடு ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி மீது நேற்று வியாழக்

19 ➤

## அபாய வலயமாகும் கிளிநொச்சி ஒரே நாளில் 150 தொற்றாளர்கள்

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 150 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார். மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் வேகமாக அதிகரித்து வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டம் வேகமாக தொற்று பரவும் அபாயமிக்க மாவட்டமாக காணப்படுகிறது என்றும் தெரிவித்த

19 ➤

## சாப்பாடா? ஒட்சிசனா? அரசு தீர்மானிக்க வேண்டும்

*சந்திம ஜீவந்தர தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 13

இலங்கையில் டெல்டா வைரஸின் தாக்கம் அடுத்த இரண்டு வாரங்களில் மேலும் தீவிரமடையும் அபாயம் காணப்படுகின்றது. தற்போதைய நிலைமையில் மிகவும் முக்கியமானது உணவா? அல்லது ஒட்சிசனா? என்பது தொடர்பில் அரசு தீர்மா

19 ➤

## பிறந்தநாள் கொண்டாட்டத்திலும் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியிலுள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றில் இளைஞர்கள் குழு கேக் வெட்டி பிறந்தநாள் கொண்

19 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளை மூடப்பட்டது

சாவகச்சேரி, ஓக. 13
மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளை நேற்று மூடப்பட்டது. கொடிகாமம் நகர்ப்பகுதியில் சாவகச்சேரி சுகாதார பிரிவினர் நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையில் மக்கள் வங்கிக் கிளையில் பணியாற்றும் ஓர் அலுவலருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து வங்கிக்கிளை மூடப்பட்டது. (து-9)

# தென்மராட்சியில் 23பேருக்குத் தொற்று

சாவகச்சேரி, ஓக.13
தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 23 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர், தமது பணியகத்திலும் கொடிகாமத்திலும் நேற்று மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் 11 பேருக்கு, சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் 12 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் கொடிகாமத்தில் 9 பேருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் வங்கிப் பணியாளர் மற்றும் தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவர் ஆகியோருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் 92 பேருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் செயலகத்தைச் சேர்ந்த ஐவர், மற்றும் தனிமைப்படுத்தலில் இருந்த நால்வருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்கு தொற்று ஏற்படவில்லை.

இதேவேளை, கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சாவகச்சேரி மருத்துவமனைக்கு வருகை தந்தோருக்கு மருத்துவமனையில் மேற்கொண்ட பரிசோதனையில் ஒன்பது பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை, சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் 85 பேருக்கு எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுபெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-9)

### கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில்

# யாழ்ப்பாணப் பல்கலையின் பீடாதிபதிகள் சிலர் அசமந்தம்

## கொவிட் செயலணிக்கு முறைப்பாடு

**யாழ்ப்பாணம், ஓக. 13**
**கொரோனாத் தொற்றால் விடுக்கப்பட்ட அலுவலக நடைமுறைகளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சில துறைத் தலைவர்களும், பீடாதிபதிகளும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்றனர் என்று குற்றம்சாட்டப்பட்டதோடு, இந்த விடயம் இராணுவத் தளபதி தலைமையிலான தேசிய கொவிட்-19 தடுப்புச் செயலணியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.**

நாட்டில் கொவிட்-19 தொற்று, கட்டுப்படுத்தப்பட முடியாதளவுக்கு பரவலடைந்து வருவதை அடுத்து பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் கடந்த 6 ஆம் திகதிய 2/2021 (IV) இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அதற்கமைவாக அலுவலக நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைய, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவுறுத்தியுள்ளார். எனினும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பணியாளர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ள நிலையிலும் எதுவித பொறுப்புமற்று விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த துறைத்தலைவர்கள் தமது பணியாளர்களைக் கட்டாயப்படுத்தி பணிக்கு வருமாறு வற்புறுத்துகின்றனர் எனவும், கொரோனா தொற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் அலுவலகங்களைத் னனனனனனதொற்று நீக்குவதற்கும், அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவர்களைத் னதனிமைப்படுத்தி வைப்பதற்கும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளக சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளபோதிலும் துறைத்தலைவர்கள் சிலர் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்றனர் என்றும் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஊழியர்களால் தேசிய கொவிட் 19 தடுப்புச் செயலணிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-5)

# சாரதி அனுமதிப்பத்திர காலாவதி திகதி நீடிப்பு

கொழும்பு, ஓக. 13
சாரதி அனுமதிப்பத்திர காலாவதி திகதி இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். போக்குவரத்து அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். கொவிட் தொற்று பரவல் காரணமாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர மற்றும் நாரஹேன்பிட்டி அலுவலகங்கள் 7 நாள்களுக்கு மூடப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-இ)

# வைத்தியரின் விரல் துண்டிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 13
வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழுள்ள சித்த மருந்து உற்பத்தி நிலையத்தில் பணியாற்றும் வைத்தியர் ஒருவரின் நுனி விரல் துண்டாடப்பட்ட சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

அவசர தேவை நிமித்தம் அங்கு பணிபுரிந்த ஆண் வைத்தியர் ஒருவர் அரைக்கும் இயந்திரத்தை செயற்படுத்த முற்பட்டவேளை அவருடைய விரலின் ஒரு பகுதி இயந்திரத்தில் சிக்கி சிதைவடைந்தது என்று கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த வைத்தியர் யாழ். போதனா மருத்துவமனையில் சக ஊழியர்களால் சேர்க்கப்பட்டார். (து-319)

### முல்லைத்தீவு சாலை முன்

# இ.போ.ச. ஊழியர் இருவர் கவனவீர்ப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலையில் பணியாற்றும் ஒருவரின் ஊழல் மோசடிகள் மற்றும் பக்கச்சார்பான செயற்பாடுகளுக்கு நீதி கோரி இரண்டு பணியாளர்கள் நேற்று முல்லைத்தீவு சாலைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு சாலையில் பணியாற்றும் தொழிற்சங்கம் ஒன்றின் தலைவராகவுள்ள ஒருவர், பல ஊழல் மோசடி, இலஞ்சம் வாங்கல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றார்.

அவரின் தன்னிச்சையான நடவடிக்கையால் முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் சாலையில் கடமையில் ஈடுபடும் சாரதி பாதிக்கப்பட்டமை, 2014 ஆம் ஆண்டு முல்லைத்தீவு சாலையில் 74 ஆயிரம் ரூபா திருடப்பட்டதால் பணி இடைநிறுத்தப்பட்டு மீண்டும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளமை, 2019 ஆம் ஆண்டு 21 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்து கணக்காளரால் கண்டறியப்பட்ட நபர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமை, சாலையில் பணியாளர்கள் இடமாற்றம் வழங்குவதற்கு இலஞ்சம் பெற்றமை, ஏனைய பணியாளர்களிடம் [illegible] கேட்டு [illegible] இல்லாவிடில் [illegible] அச்சுறுத்தல் விடுத்தமை, சாலையை அழகுபடுத்தல்




வேலைத்திட்டத்துக்காக பணியாளர்களிடம் வாங்கிய [illegible] ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கணக்கில் காட்டாமல் மோசடி செய்துள்ளமை உட்பட பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடபிராந்திய பிரதான முகாமையாளர் எஸ். குணபாலச்செல்வன், சம்பவ இடத்துக்கு வருகைதந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கையை கேட்டறிந்தார்.

ஒரு மாத காலத்துக்குள் போக்குவரத்து சாலைப் பணியாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அவர் தெரிவித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (து-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்டிலில் எடுத்துவரப்பட்ட நல்லூரான் கொடிச்சீலை



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், கொடியேற்றத்துக்கு கொடிச்சீலை எடுத்துவரும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று நடைபெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் கோவில் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாய பூர்வமாக கோவிலில் ஒப்படைக்கப்படுவது பாரம் பரிய வழக்கமாகும். நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடாந்தம் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையை வழங்கிவருகின்றனர்.

அதன்படி, யாழ்ப்பாணம் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள வேல்மடம் முருகன் கோவிலில் முற்பகல் 9 மணிக்கு நடைபெற்ற விஷேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து சம்பிரதாயபூர்வமாக மாட்டுவண்டிலில் கொடிச்சீலை வைக்கப்பட்டு பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச்செல்லப்பட்டு முற்பகல்10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலை சென்றடைந்தது. அங்கு கோவிலின் வெளிவீதி உலாசென்று சுபநேரத்தில் பூசைகள் நடைபெற்று கொடிச்சீலை நல்லூர் கோவில் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (த-20)




# யாழ்.பல்கலைக்கழகத்தில் கொரோனா தாண்டவம்

### பணியாளர்களை வீடுகளில் முடங்குமாறு கூறியதோடு துணைவேந்தருக்கும் கடிதம் அனுப்பிய ஊழியர் சங்கம்

**யாழ்ப்பாணம், ஓக. 13**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், சில பீடங்கள் உட்பட பல பிரிவுகளிலும் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனையடுத்து, பணியாளர்கள் எவருமே பணியிடங்களுக்குச் செல்லாமல் பாதுகாப்பாக வீடுகளில் இருக்குமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கூறியுள்ளது. இது பற்றிய அறிவிப்பை, பல்கலைக்கழக துணைவேந்தருக்கு கடிதம் மூலமாக நேற்று அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த வெள்ளிக்கிழமைவரை எங்களுடன் நடமாடித் திரிந்த ஓர் ஊழியர் கொரோனாத் தொற்று உள்ளதாகி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

பெரும் அபாயமாக மாறிவரும் கொரோனாப் பெருந்தொற்று சூழலில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர்களை பெருந்தொற்று அபாயத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக பணியாளர்கள் பணிக்கு வருதல் தொடர்பில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரதும் கருத்துக்கள் அறியப்பட்டு மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வளாகம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், துணை மருத்துவ கற்கைகள் பீடம், இந்து கற்கைகள் பீடம், இராமநாதன் மண்டப நிர்வாகத்தொகுதி, பராமரிப்புக் கிளை, பாற்பண்ணை மாணவர் விடுதி ஆகிய பல பிரிவுகளிலும் பணிபுரியும் பணியாளர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவ்வாறிருந்தும்கூட அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் எவ்வித பொறுப்புமற்று பணிக்கு வருகின்றனர். அதனால் ஏற்பட்டுள்ள அபாய நிலையை கருத்திற்கொண்டு இந்த அவசர முடிவை எடுக்க நேரிடுகிறது.

அதனடிப்படையில் நேற்றுத் தொடக்கம் பணியாளர்கள் அனைவரும் பணியிடங்களுக்குச் செல்லாமல் பாதுகாப்பாக வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் கலந்துரையாட விரும்புகின்றோம். இந்த விடயங்கள் பல்கலைக்கழகத்தின் கொரோனா பாதுகாப்புக்குழுத் தலைவர் மருத்துவர் சுரேந்திரகுமாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. -என்றுள்ளது. (த)



## நல்லூர் வரவேற்பு வளைவில் சம்பிரதாயபூர்வ கொடிகட்டல்

யாழ்ப்பாணம், ஓக. 13

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளநிலையில், நல்லூர் கோவிலை அடையாளப்படுத்தும் வகையில் செம்மணி பிரதான வீதியில் அமைக்கப்பட்ட, வரவேற்பு வளைவில் சம்பிரதாய பூர்வமாக கொடிகட்டும் நிகழ்வு நேற்று மதியம் நடைபெற்றது.

நல்லூர் ஆலய அறங்காவலர் சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கொடி கட்டும் நிகழ்வில், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கல்வி இராஜாங்க முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியில் 8 மில்லியன் ரூபா நிதியீட்டத்தில் நல்லூர் கோவில் நிர்வாகத்தினரால் குறித்த அலங்கார வளைவு அமைக்கப்பட்டது.

நல்லூர் கோவிலை அடையாளப்படுத்தும் வகையில் அலங்கார வளைவு அமைக்கப்பட்டு கடந்த தைப்பொங்கல் தினத்தன்று வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இன்று காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் பெருந்திருவிழா ஆரம்பமாகின்றது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவ பெருந்திருவிழா, 25நாள்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-26)

வவுனியா சாலையின்

## இ.போ.ச. நடத்துநருக்கும் கொவிட் தொற்று உறுதி


வவுனியா, ஓக. 13

இலங்கைப் போக்குவரத்து சபையின் வவுனியா சாலையில் கடமையாற்றும் பேருந்து நடத்துநர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த சாலையில் கடமைபுரியும் சாரதி ஒருவருக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, சுகாதாரப் பிரிவினரால், வவுனியா சாலையில் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களிடம் நேற்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே நடத்துநர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.




இதனையடுத்து அவர் இடைத்தங்கல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டாவின் ஆட்டம் இனித்தான் ஆரம்பம்

**கொழும்பு, ஓக. 13**

**டெல்டா வைரஸ் தாக்கத்தின் ஆரம்பக்கட்டத்திலேயே தற்போது நாம் இருக்கின்றோம். அதன் பாரதூரத்தன்மை இனித்தான் தெரியவரும். எனவே, அடுத்த இரண்டு வாரங்கள் தீர்க்கமானவை என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் வேகமாக பரவிய டெல்டா திரிபு வைரஸூடன் கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அதாவது தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த ஒருவருக்கு டெல்டா தொற்று உறுதியானது.

அதன் பின்னர் ஜூன் மாதத்தில் சமூகத்தில் இருந்து தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். இந்த நிலையில் ஜூன் மாதம் இறுதியில் இருந்து டெல்டா பிரதான தொற்றாக உருவெடுக்க ஆரம்பித்தது.

கொழும்பு மாவட்டத்தில் நூற்றுக்கு 98 வீதமான தொற்றாளர்களுக்கு டெல்டா திரிபு வைரஸ் பரவியுள்ளது. ஏனைய பகுதிகளில் இன்னும் இல்லை. ஏனெனில் டெல்டாவின் ஆரம்பக்கட்டத்தில் தான் தற்போது நாம் உள்ளோம். வைரஸ் தொற்று உருவாகி, சமூகமயமாகி, தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க 6 வாரங்கள் வரை செல்லும். அந்த 6 ஆவது வாரத்தில் தான் நாம் உள்ளோம். எனவே டெல்டாவின் பாரதூரத்தன்மையை எதிர்காலத்தில் பார்க்கலாம். அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்கள் முக்கியமானவை. தொற்றாளர்களின் எண்ணிக்கை எகிறக்கூடும்- என்றார். (ம-4,44)




## பி.சி.ஆர். பரிசோதனைக்கு மூன்று நாள்கள் ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஓக. 13

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளுக்காக வாரத்தில் 3 நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக் பிரதி செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் முற்பகல் 9 மணிக்கு முன்னர் வருகை தந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

இதேவேளை வீடுகளில் சுகாதார திணைக்களத்துக்குத் தெரியாமல் நடத்தப்படுகின்ற கொண்டாட்டங்களால் கொரோனாத் தொற்று பரம்பல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. எனவே இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறும் மருத்துவ அதிகாரி அறிவுறுத்தியுள்ளார். (ம-4,9)



## சுற்றுலாத்துறை கல்வியில் திருத்தம் செய்யத் திட்டம்

கொழும்பு, ஓக. 13

இலங்கை சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் தொடர்பான கல்வியில் திருத்தம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் அடிப்படை பாடநெறிகளையும், முகாமைத்துவப் பாடநெறிகளையும் நடத்தி வருகின்றது.

தற்போது குறித்த பாடநெறிகளுக்குச் சமமான மட்டத்திலான பாடநெறிகள் ஒரு சில பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த பாடநெறிகள் கோட்பாட்டு ரீதியாக மாத்திரம் காணப்படுகின்றன. எனினும் துறைசார் ரீதியாக போதுமானளவு செயன்முறை பயிற்சிகளை குறித்த பாடநெறிகள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு இயலாது.

அதனால் சுற்றுலாத்துறையில் போதுமானளவு துறைசார் களச் செயன்முறைப் பயிற்சிகளுடன் கூடிய பட்டப்படிப்பை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தால் மேற்கொள்வது பொருத்தமானது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஓ.4)

## மாகாண கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டும்

*சுகாதார பரிசோதகர்களின் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, ஓக. 13

மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகளை பெயரளவில் அல்லாமல் இன்னும் கடுமையாக்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்றாலும் மக்களின் சுகாதார பாதுகாப்பு விடயங்களில் நேரடியாக செயற்பட்டுவரும் பிரிவினர் என்ற வகையில், நாட்டின் தற்போதைய நிலையை மிகவும் பயங்கரமானதாகவே எங்களால் பார்க்க முடிகின்றது. நாட்டின் தற்போதைய நிலைமையைப் பார்க்கும் போது கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். மாகாணங்களுக்கிடையிலான கட்டுப்பாடு கட்டாயமாக இடம்பெற வேண்டும்- என்றார். (ம-4)

## இரண்டு பிள்ளைகளுடன் தாயைக் காணவில்லை

*கணவர் முறைப்பாடு*

வவுனியா, ஓக. 13

வீட்டில் தனிமையிலிருந்த இளம் தாய் உட்பட இரண்டு பிள்ளைகளைக் காணவில்லை என்று கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் முதாலம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த சற்குணசிங்கம் தமிழினி மற்றும் பிள்ளைகளான டனிஸ்கா, கனிஸ்கா ஆகியோர் வீட்டில் தனிமையில் இருந்த போது காணாமல் போயுள்ளனர் என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி கணவர் வேலைக்குச் சென்று மாலை வீடு திரும்பியபோது, வீட்டில் இருந்த மனைவி மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளையும் காணவில்லை என்று அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-4,18,110)

# தொற்றாளர்கள் அதிகரிப்பதால் பொறுப்புடன் செயற்படுங்கள்

## தொற்று நோயியல் மருத்துவர் ஆலோசனை

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிப்பதால், மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று பிராந்திய தொற்று நோயியல் மருத்துவர் நிமால் அருமைநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாவட்டத்தில் முதலாவது நோயாளி அடையாளம் காணப்பட்ட நாள் தொடக்கம் ஜூலை மாதம் வரை ஆயிரத்து 400 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் கர்ப்பிணிகள். 52 பேர் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள். அத்துடன் மூவர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது நாளுக்கு நாள் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

பொதுமக்கள் எவ்வித சமூகப் பொறுப்பும் இன்றி சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது நடமாடித் திரிவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் தொற்றுப் பரவும் வேகம் மிகவும் அதிகரிக்கும்.

தடுப்பூசியை செலுத்திக்கொண்டாலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது கட்டாயமாகும். பரிசோதனை மூலமே தொற்றாளர்கள் இனம் காணப்படுகின்றனர்.

பொதுமக்கள் இந்த நெருக்கடிகளை புரிந்து கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ம-4,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைநீர் சேகரிப்புக்கு

# சிமெந்து தொட்டிக்குப் பதிலாக 1,300 பிளாஸ்டிக் தொட்டிகள்!

யாழ்ப்பாணம், ஓக. 13

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைநிறுத் தப்பட்ட மழைநீர் சேகரிப்பு சிமெந்துத் தொட்டிக்குப் பதிலாக ஆயிரத்து 300 பிளாஸ்டிக் தொட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படும் கிரா மங்களில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு குறித்த பிளாஸ்டிக் தொட்டிகள் வழங்கப்படவுள்ளன.**



இதற்கென பிரதேசத்தில் மழைநீர் சேகரிப்பை குடிதண்ணீருக்குப் பயன் படுத்தும், பயனாளிகளைத் தெரி வுசெய்து அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலகத்தால் 6 பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியு டன் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிமெந் தால் கட்டப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இரு வருடங்களுக்கு முன் னர் ஆரம்பித்த நிலையில் சில கார ணங்களால் அது இடைநிறுத்தப்பட் டது. சிமெந்து தொட்டிக்குப் பதிலாக பிளாஸ்டிக் தொட்டியைப் பயன்படுத்த தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டுக்கான செயலகத்தினர் நடவ டிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் மாவட்டத்தில் குடி தண்ணீருக்கு பற்றாக்குறை காணப் படும் பிரதேசங்களான நெடுந்தீவு (480), ஊர்காவற்றுறை (500), கர வெட்டி (10), பருத்தித்துறை (20), மரு தங்கேணி (150) மற்றும் சாவகச்சேரி (140) ஆகிய இடங்களில் ஆயிரத்து 300 பயனாளிகளைத் தெரிவுசெய்து அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலகத்தால் குறித்த ஆறு பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ஐ-9)

## சாவ. பிரதேச சபையின் ஓர் அலகு முடக்கம்!

சாவகச்சேரி, ஓக. 13


சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் ஓர் அலகு நேற்று முடக் கப்பட்டுள்ளது.

இந்த அலகில் கடமையாற்றும் இரு அலுவலர்களுக்கும், பிரதேச சபை சார திக்குமாக மூன்று பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து சவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் இந்த அலகு முடக்கப்பட்டதுடன், அங்கு கடமை யாற்றிய அனைவரும் தனிமைப்படுத்தப் பட்டனர். (ஐ-9)

## கொடிகாமம் சந்தைப் பகுதியில் 97 பேருக்கு கொவிட் சோதனை

கொடிகாமம், ஓக. 13



கொடிகாமம் சந் தைப் பகுதியில் நேற்று 97 பேருக்கு கொரோனாப் பரி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நோய் அறிகுறிகளுடன் கொரோனாத் தொற் றாளர்கள் 5 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

குறிப்பிட்ட நிலையங்களுடன் தொடர்பைப் பேணியவர்களுக்கே நேற்று கொரோனா பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 86 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும், 11 பேருக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற் கொள்ளப்பட்டன. (ஐ-159)




## கொரோனாத் தொற்றால் கிராம அலுவலகம் பூட்டு

வவுனியா, ஓக. 13

கொரோனா தொற்றுக் காரணமாக வவுனியா பண் டாரிக்குளம் கிராம அலுவலர் அலுவலகம் தற்காலி கமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோ கத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய் யப்பட்டது.

இதனையடுத்து கிராம அலுவலர் அலுவலகம் தற் காலிகமாக மூடப்பட்டுள்ளது. மேலும் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணிய அலு வலகத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். (ஐ-18)

## கொரோனாவால் தடைப்பட்டது மாரியம்மன் ஆலயத் திருவிழா

மன்னார், ஓக. 13

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக நானாட்டான் சிறி செல்வமுத்து மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திரு விழா பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக் கையில்,

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற் றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றும், இறப்புக்களும் அதிகரித்துக் காணப்படுவதுடன், மன்னார் மாவட்டத் திலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவு பக்தர்களுடன் திருவி ழாவை நடத்துவதற்கு சுகாதாரத்துறை அனுமதி வழங்கியிருந்தாலும், திருவிழாவை நடத்துவதற்குரிய குருக்கள் மற்றும் வாத்திய கலைஞர்கள் உள்ளிட்ட பலர் வெளிமாவட்டங்களில் இருந்தே வரவேண்டி உள்ளது. இதன் காரணமாக திருவிழா பிற்போடப்பட் டுள்ளது. -என்றனர். (ஐ-213)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 13

'சிறிமாவோ தரப்படுத்தலென்று தமிழரைத் தரைப்படுத்தி விட்டார்' என்னும் நூலின் வெளி யீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத் தில் நடைபெற்றது.

தரப்படுத்தலின் கதை என்ற தலைப்பில் பேரா சிரியர் இரத்தினஜீவன் ஹூல் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். அது இடதுசாரி ஐக்கிய முன் னணிப் அரசின் கீழ்த்தரமான இனவாத மாற் றங்களை பல்கலைக்கழக அனுமதித் திட்டத்தி லும் பொதுச்சோதனைகளிலும் கைவைத்து தமிழரின் தலை அறுத்த கதை என்ற உபதலைப் பிலும் எழுதப்பட்ட புத்தகமாகும். (ஐ)

மருதமடு பெருவிழாவை முன்னிட்டு

# பாத யாத்திரை வருவோர் தடுத்து நிறுத்தப்படுவர்

### மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 13

'யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்து பாத யாத்திரை யாக பக்தர்கள் மடுத் தேவாலயத்தை நோக்கி வருகின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் சுகாதார நடைமுறை களை கவனத்தில் கொண்டு அவர் களை சோதனைச் சாவடிகளில் வைத்து தடுத்து நிறுத்த பாதுகாப்புப் படையின ரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது' இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித் துள்ளார்.

மருதமடு பெருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தி னம் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைகளுக்கி ணங்க இம்முறை மடுத் திருவிழாவுக்கு 150 பக்தர்களை மட்டுமே அனுமதிப்ப தாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாதுகாப்புத் துறை யினரின் உதவியுடன்பாதயாத்திரையாகவோ அல்லது போக்குவரத்து மூலமோ மடுத் திருத்தலத்துக்கு பொதுமக்கள் வருவதை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது. தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள மிக வேகமான கொரோனாத் தொற் றின் தீவிரத்தால் பல கட்டுப்பாடுகளை சுகாதார அமைச்சு எங்களுக்கு விடுத் துள்ளது. ஆகவே இதனைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக் கின்றோம் -என்றார். (ஐ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் எட்டு பாடசாலைகள் பூட்டு

## மீளத் திறக்குமாறு கோரிக்கை

**கிளிநொச்சி, ஓக. 13**

**கிளிநொச்சி மாவட்டத்தில் போர்ச் சூழல் மற்றும் உவர்ப் பரவல் காரணமாக 8 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே அவற்றை மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தந்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் 6 பாடசாலைகளும், கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் 2 பாடசாலைகளும் இவ்வாறு மூடப்பட்டுள்ளன. பூநகரி பொன்னாவெளி கிராமம் முழுமையாக உவரடைந்துள்ளதால், மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து உள்ளனர். அதனால் குறித்த பகுதியிலிருந்த பாடசாலை மூடப்பட்டது. தற்போது அந்தப் பாடசாலையை கிராஞ்சிக்கும் வேரவிலுக்கும் இடையில் இயக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் வன்னேரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம், கிராமம் முழுமையாக உவரடைந்ததன் காரணமாக மூடப்பட்டுள்ளது. அந்தப் பாடசாலையையும் ஸ்கந்தபுரம் மணியங்குளம் கிராமத்தில் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மூடப்பட்டுள்ள 8 பாடசாலைகளும் இயங்குவதற்கு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,13)

## விவசாயி மீது தாக்குதல்

சாவகச்சேரி, ஓக. 13

குரக்கன் பயிரை அழித்த மாட்டை பிடித்து கமக்கார அமைப்பில் கையளித்த விவசாயி மீது, மாட்டின் உரிமையாளர் தாக்குதல் நடத்தியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான விவசாயி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி சாவகச்சேரி கிராம்புவில் பகுதியில் உள்ள தோட்டத்தில் குரக்கன் பயிரிட்டுள்ளார். குறித்த பயிரை கட்டாக்காலி மாடு அழித்தபோது அதனைத் துரத்திப் பிடித்து பயிர் அழிவுக்கான நட்ட ஈடு பெற்றுத்தருமாறு கமக்கார அமைப்பிடம் ஒப்படைத்துள்ளார். இதனை அறிந்த மாட்டின் உரிமையாளர் குறித்த விவசாயியை தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஜ-9)



## தாய்மார் காத்திருப்பு மண்டபம் மட்டுவில் வடக்கில் திறப்பு

சாவகச்சேரி, ஓக. 13

மட்டுவில் வடக்கு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அருகில் மட்டுவில் சரசாலை இளைஞர்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட தாய்மார் காத்திருப்பு மண்டபம் நேற்றுமுன்தினம் வைபவரீதியாக திறக்கப்பட்டது. குறித்த மண்டபத்தை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சி.சுதோகுமார் திறந்து வைத்தார். ஏற்கனவே சுகாதாரத் திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தில் பெரும் இடநெருக்கடி காணப்பட்டதன் காரணமாக குறித்த காத்திருப்பு மண்டபம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-9)




## வீதி விபத்தில் பெண் காயம்!

கொடிகாமம், ஓக. 13

மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமம் கொயிலாமனைச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது. மீசாலை வடக்கைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணே இவ்வாறு விபத்தில் காயமடைந்தார். குறித்த பெண் வீதியால் நடந்து சென்றவேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-159)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குடும்பத் தலைவர் படுகாயம்

சாவகச்சேரி, ஓக. 13

வீடு புகுந்த இனந்தெரியாதோர், கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் குடும்பத் தலைவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை மேற்கு வயல்கரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய குடும்பத் தலைவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-9,159)



## மன்னார் நகர சபையால் கிராமத்து வீதிகள் சீரமைப்பு

மன்னார், ஓக. 13

மன்னார் நகர சபையால் பழுதடைந்த கிராமத்து வீதிகள் அனைத்தையும் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட 9 வட்டாரங்கள் உள்ளடங்கிய கிராமங்களில் குண்டும் குழியுமாக பழுதடைந்த நிலையில் உள்ள வீதிகள் [illegible] சீரமைக்கப்பட்டு வருகின்றன. [illegible] அமைவாக இந்த வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-213)

## அரங்க கதையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 13

புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'வேடதாரி 2 அரங்குக்கான இதழ்' என்னும் விடயத்தில் எழுத்தாளர் வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் இயல்வாணன் சு.ஸ்ரீகுமரன் கதையாடவுள்ளார்.

வாழ்த்துரையை திருமறைக்கலா மன்றத்தின் பிரதி இயக்குநரும் யாழ்.கல்வி வலய நாடகமும் அரங்கியலும் ஆசிரிய ஆலோசகருமான ஜோ.ஜோன்சன் ராஜ்குமாரும், ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரனும் வழங்கவுள்ளனர். (ஜ)

## கோப்பாய் பிரதேச இணக்கசபை அமர்வு

கோப்பாய், ஓக. 13

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் இணக்க சபை அமர்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக சம்மந்தப்பட்ட பிணக்குடன் தொடர்புடைய தரப்பினர் மட்டும் அனுமதிக்கப்படுவர் என்று இணக்க சபையின் தவிசாளர் இ.கிருஸ்ணபிள்ளை அறிவித்துள்ளார். (ஜ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முடக்கமின்றி ஏதுவழி!


நாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டால் அடுத்த 20 நாள்களுக்குள் குறைந்தது 1,200 உயிர்களைக் காப்பாற்றலாம். இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட 5 நாள்கள் தாமதமானாலும் அது 700 பேரின் இறப்புக்குக் காரணமாக அமையும் என்று அறிவுறுத்தியுள்ளார் ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அம்பக்கொடி.

பேராசிரியர் சுனேத் அம்பக்கொடியின் இந்த எச்சரிக்கை தற்போது மிக முக்கியத்துவம் மிக்க கருத்தாகப் பார்க்கப்படுகின்றது. காரணம், கொரோனாப் பெருந்தொற்றுத் தொடர்பில் அவர் தொடர்ச்சியாக தெட்டத்தெளிவான துல்லியமான கணிப்புக்களை மேற்கொண்டு கருத்துப் பகிர்கின்றமையே. கடந்த 7ஆம் திகதியும்கூட பேராசிரியர், 'அடுத்த இரு வாரங்களில் தினசரி கொரோனா இறப்புக்களின் சராசரி 150இனைத் தாண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார். இன்று அதற்கேற்பதான் இறப்புக்களின் தரவுகள் செல்கின்றன என்பது இங்கே கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயமும்கூட.

பொருளாதாரம் ஏற்கனவே நலிவடைந்து போயுள்ள இந்த நிலையில், நாட்டை முடக்கினால் அதனால் வரும் ஆபத்து மிகப்பெரியது. அதை உணர்ந்து கொள்ள முடியாமலில்லை. தற்போதே உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் சரி, சர்வதேச வர்த்தகத்திலும் சரி இலங்கை திக்குமுக்காடி வருகின்றது. இந்த நிலையில், ஊரடங்கு விதிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் மக்களுக்குப் புரியாமலில்லை. அதுபோக அன்றாடம் உழைத்து உண்ணும் மக்களுக்கு இந்த ஊரடங்கால் வரும் துன்பங்கள் சொல்லி மாளாதவை. ஆனால், கொவிட் நிலைமையின் தற்போதைய பாரதூரத்தை சீர்தூக்கிப் பார்த்தால் ஊரடங்கு உத்தரவுகள் தான் தற்போது ஒரேதெரிவு என்பது புரியும்.

கொவிட் அலையின் தற்போதைய வேகத்தை வைத்துப் பார்த்தால், 'வீட்டுக்குவீடு வாசல்படி' என்ற நிலை வருவதற்கு இன்னும் ஓரிரு வாரங்கள்தான் எஞ்சியுள்ளன. அவ்வாறான பேரவலம் நிகழ்ந்து விட்டால் அதன்பின்னர் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பின்னடைவு தற்போது ஊரங்கு உத்தரவு விதிக்கப்படுவதால் ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவை விடவும் பாரதூரமாக அமையும் என்பது வெள்ளிடைமலை. தனிநபர் பொருளாதாரத்திலும் இந்த வீட்டுக்குவீடு ஏற்படும் கொவிட் தொற்று சம்மட்டி அடியொன்றைக் கொடுத்துவிடும்.

ஆதலால் வெளிநாட்டு ஏற்றுமதிகளை தொடர்ந்து செய்யக்கூடிய பொறிமுறையொன்றை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவேனும் தக்கவைத்துக் கொண்டு மறுமுனையில் ஊரடங்கு உத்தரவுகளையும் சுகாதாரப் பொறிமுறைகளையும் இறுக்கமாக்கும் நடவடிக்கையில் அரசு தீவிரம் காட்ட வேண்டும். சுகாதாரத்துறை வலியுறுத்துவதைப்போன்று குறைந்தது இரண்டு வாரகால முடக்கத்துக்காவது நாடு செல்லவேண்டும். கொவிட் பி.சி.ஆர். சோதனைகளையும், அன்டிஜன் சோதனைகளையும் அரசு தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு உச்ச வேகத்தில் முன்னெடுக்கப்படும் இந்தச் சோதனைகள்தான் நாட்டை இயல்பான ஒரு நிலைக்குள் திருப்பிச் செல்லுமே தவிர 'முடக்கம் நீக்கம் முடக்கம் நீக்கம்' என்ற சித்து விளையாட்டுக்கள் அல்ல.




# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

**கொழும்பு, ஓக. 13**

**அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசு தீர்வு வழங்கும் வரை தொழிற்சங்கப் போராட்டத்தைத் தொடர்ந்தும் நடத்துவோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
எமது தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளது. எமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் வரையில் தொழிற்சங்கப் போராட்டத்தை நிறுத்த மாட்டோம். தற்போது மாணவர்களுக்கு ஒன்லைன் மூலமாக கல்வி கற்பித்தல், (க.பொ.த.) சாதாரண தர செயல்முறைப் பரீட்சைக்கு பங்கேற்பது ஆகியவற்றிலிருந்து விலகியுள்ளோம். தொழிற்சங்கங்கள் சிலதை எம்முடன் இணைத்து தொடர்ந்து போராடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். என்றார். (4)

# தொழிற்சங்கப் போராட்டங்களை அச்சுறுத்தலால் முடக்க முடியா


## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13
ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டத்தை அச்சுறுத்தல்களால் முடக்க முடியாது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்வதையோ அல்லது கைது செய்வதையோ நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பை நடத்தினர். இதன்போது சங்கத்தின் உப தலைவர்; ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கை ஆசிரியர் சங்கம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்த வாகனப் பேரணி போராட்டத்தை குழப்புவதற்கு பொலிஸார் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் இந்த தடைகளைத் தாண்டி எமது பேரணி திட்டமிட்டவாறு நடைபெற்று முடிந்தது. இதனால் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையைப் குழப்பும் பொலிஸாரினதும், அரசினதும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. இதனை அடுத்து பேரணிக்கு அழைத்து வந்த வாகனங்களையும் ஒலி, ஒளிபரப்பு செய்த உரிமையாளர்களையும் பொலிஸார் விசாரணை செய்வதும் கைது செய்வதுமான பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டத்தை திசைதிருப்பி குழப்புகின்ற பொலிஸாரின் நடவடிக்கைகளை முழுமையாக எதிர்க்கின்றோம். அத்தோடு பொலிஸாரின் இத்தகைய செயற்பாட்டை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். என்றார். (ஐ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

இன்று ஆரம்பமாகின்ற மகோற்சவப் பெருவிழா, கொடியேற்றத்தைத் தொடர்ந்து 25 நாள்களும் அற்புதமாக இடம்பெறும். கொடியேற்றப் பெருவிழாவுக்காக ஏற்றப்படுகின்ற கொடிச்சீலை வருடா வருடம் செங்குந்த பரம்பரையினரால் வழங்கப்பட்டு வருவது வழக்கமாகும்.

**'செங்குந்த மரபினர் கொடிச்சீலை வழங்கும் வைபவம்'**

ஆண்டுதோறும் கொடிச்சீலையைக் வழங்கிவரும் செங்குந்த மரபினர் தங்களால் அழகுற அமைக்கப்பட்ட ஒரு சிறிய திருத்தேரிலே நல்லைக்கந்தனின் வருடாந்த கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையை ஏற்றி கொடியேற்ற வைபவம் இடம்பெறும் நாளுக்கு முதல்நாள் காலையிலே மங்கள வாத்தியங்கள் முழங்க அன்பர்களின் அரோகரா கோசத்துடன் தேரில் வைத்து இழுத்து வருவார்கள். நல்லைக் கந்தனின் ஆலய வாயிற்புறத்தை தேர் வந்தடைந்ததும் தேரிலிலிருந்து கொடிச்சீலையை உபயகாரராகிய செங்குந்த மரபிலுள்ள பெருமகன் தலையில் சுமந்து சென்று கோவில் பிரதம குருக்களிடம் கையளிப்பார்.

இந்தக் கொடிச்சீலையை எடுத்துவரும் திருத்தேர் வேல்மடம் முருகன் ஆலயத்திலிருந்து வருடாவருடம் தேர்ச்சீலையை ஏற்றிக்கொண்டு வரும்.

**செங்குந்த மரபினர் கொடிச்சீலை வழங்கும் ஏனைய ஆலயங்கள்**

நல்லைக்கந்தன் ஆலயத்தைவிட வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயம், வயல்வெளிக் கந்தசுவாமி கோவில், ஒட்டுசுட்டான் சிவன் கோயில், யாக்கரைப் பிள்ளையார் கோயில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில், பருத்தித்துறை பசுபதீஸ்வரர் கோயில், கரவெட்டி நுணாவில் பிள்ளையார் கோயில், மாமாங்கேஸ்வரர் கோயில் என்பனவற்றுக்கு இந்தப் பரம்பரையினரே கொடிச்சீலை கொடுத்து வருகின்றனர்.

**நல்லைக் கந்தனின் கொடியேற்றம்**

செந்தமிழின் வடிவுடைய திருமுருகனாக சீராறு படைமேவும் முதல்வகை, அந்தரத்தோர் சிறைமீட்ட அழகனாக, அசுரர் குல மறுத்த சரவணனாக, மந்திரமும் தந்திரமும் ஆனவனாக, மயிலேறி வந்தெம்மைக் காப்பவனாக, அலங்காரக் கந்தனாக, சித்திரங்கள் பலவுடனே சேண் விளங்கும் சிங்காரக் கோபுரத் தோடமைந்த கோயிலில் சகல வாத்திய ஒலிகளுடனும் ஆச்சாரியர்களின் வேத பாராயணத்துடனும் திருக்கொடியை கொடித்தம்பத்தில் ஏற்றுவர். கொடிச்சீலையின் மறுமுனையைக் கொடித்தம்பத்தில் வலமாகச் சுற்றி வந்து, தம்பத்தின் அடியிற் கட்டுவர். அவ்வாறு கட்டும்போது தம்பத்தின் அடியைச் சுற்றிலும் தர்ப்பைகளைப் பரப்பி இணைத்துக் கட்டுவர்.

தீர்த்த உற்சவம் இடம்பெறும் வரை தினமும் காலையிலும், மாலையிலும் கொடித்தம்பத்துக்கு அபிஷேக பூசை ஆராதனைகள் வசந்த மண்டப பூசை யாக தரிசனம் என்பன இடம்பெற்று நல்லூரான் தரிசனம் தருவான். எல்லோரையும் அலங்காரக் கந்தன் காவல் செய்து வாழ்விப்பான் என்று பெருமானின் மகோற்சவ காலங்களில் பிரார்த்திப்போமாக.

## ஏறட்டும் சேவற்கொடி

ஏறட்டும் ஆறுமுகா உன் சேவற்கொடியின்று
மாறட்டும் முருகா கொரோனாவாம் நோயதுவும்
தேறட்டும் தரணியிலே தகுந்ததுவாம் தீர்வொன்று
கூறட்டும் உன்கோவில் மணியோலை விடியலதை

**ப.மகேந்திரதாசன்**
நாயன்மார்கட்டு



வாயுபுத்ரா போன் சொப்
Vayuputhra
Phone Shop & Vivo Distributors
அனைத்து விதமான கட்டணங்களையும் இங்கு மேற்கொள்ளலாம்.
ஏமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நல்லூர் கந்தன் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.
All Types of Recharge Available Here
அனைத்து சேவைகளும் நியாயமான விலையிலும் துரித வேகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
❖ டிஷ் (Dish TV) கட்டணங்கள் ❖ மின்சார கட்டணங்கள்
❖ தொலைபேசி கட்டணங்கள் ❖ காப்புறுதி கட்டணங்கள்
❖ Phone accessories
❖ Phone Sales
❖ Repairing
❖ Unloking
❖ Software
OPPO F19Pro
வாயுபுத்ரா புக்கிங் சென்றர் சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளைமேற்கொள்ள முடியும்.
அதிசொகுசு பயணிகள் போக்குவரத்து சேவை
ஆசனப் பதிவகம் யாழ் ⇆ கொழும்பு (தினமும்)
ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ► இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Mob: 077 8840 775 No.364, Hospital Road, Jaffna. Mob: 077 36 44 246

ஏமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நல்லூர் கந்தன் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.
LINGAA
3rd Anniversary
லிங்கா பெஷன்
நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்
Mega offer
Sarees & Fancy Jewellery
From 30% to 50 % Off*
Whatsapp - 076 644 0722
Tel : 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா ஒழிப்பு செயலணி கூண்டோடு விலக வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் பேரவை வலியுறுத்து



**கொழும்பு, ஓக. 13**

**‘கொரோனா ஒழிப்பு செயலணியிலுள்ள உறுப்பினர்கள் உடன் பதவிவிலக வேண்டும். முதுகெலும்புள்ள துறைசார் நிபுணர்களே குறித்த செயலணிக்கு நியமிக்கப்பட வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் நாட்டை முடக்குவதே ஒரே வழி’ இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் ருக்ஷான் பெல்லன, ‘கொரோனா வைரஸ் பரவல் பிரச்சினையின்போது ஆரம்பம் முதல் இன்றுவரை சொதப்பல் நடவடிக்கையே இடம்பெற்றுவருகின்றது. செயலணி மற்றும் குழுக்களில் அங்கம் வகித்தவர்கள் முதுகெலும்புடன் செயற்பட்டிருந்தால் இன்று இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது. அரசியல் மற்றும் தொழிற்சங்க மயப்படுத்தல் காரணமாகவே கடும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

2020ஆம் ஆண்டில் வைரஸ் பரவலின் ஆரம்பத்தில் நிலைமை மோசமாக இருக்கவில்லை. கடும் பயணக்கட்டுப்பாட்டை விதித்திருந்தால் நிலைமையைக் கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருந்தும், 3 மாதங்களுக்கு நாடு மூடப்பட்டது. துறைசார் நிபுணர்கள் கூட இந்த யோசனையை முன்வைக்கவில்லை. தொழிற்சங்கமொன்றும், கையாள்கள் சிலரும் முன்வைத்த பரிந்துரையின் பிரகாரமே நாடு முடக்கப்பட்டது. இதனால் 900 பில்லியன் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. ஆனால் இன்று வைரஸ் தொற்று சமூகத்தொற்றாகியுள்ளது. அடுத்துவரும் நாள்கள் பயங்கரமானவை. தற்போதைய டெல்டா தொற்று திரிபடையலாம். அதனால் ஏற்படும் பாதிப்புகள் எவ்வாறு அமையுமென தெரியவில்லை. நிலைமைக்கு பொறுப்புக்கூறவேண்டியது யார்? அந்த குழு தான். கொரோனா ஒழிப்பு செயலணி கலைக்கப்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். செயலணி கலைக்கப்பட வேண்டியதில்லை. அந்த குழுவில் உள்ளவர்கள் பதவிவிலக வேண்டும். அதன்பின்னர் விசேட மருத்துவர்கள் உள்ளிட்ட முதுகெலும்புள்ள துறைசார் நிபுணர்கள் குறித்த குழுவுக்கு நியமிக்கப்பட வேண்டும்..’ என்றார். (ஐ-44)

## போருக்கான பயிற்சிகள் பெற்றவர்கள் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதா?

### தலதா அத்துக்கோரல விசனம்

கொழும்பு, ஓக. 13
போருக்கான பயிற்சிகளைப் பெற்ற இராணுவத்தினர் எவ்வாறு கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தாம் அரசு கூறுவதையே செய்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசு என்றால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கூறுவதைச் செய்கின்றார்களா? அல்லது சுகாதார அமைச்சர் கூறுவதைச் செய்கின்றார்களா?

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் கூறிய விடயத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். இதனை ஆரம்பத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியும் கூறியது. எவ்வாறு மருத்துவர்களுக்கு போர்க்களத்துக்குச் சென்று போர் புரிய முடியாதோ, அதே போன்று போருக்குப் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினரால் மருத்துவத்துறையுடன் தொடர்புடைய கொவிட் பரவலைக்கட்டுப்படுத்த முடியாது. -என்றார். (4)

## இந்தியாவிலிருந்து திரும்புவோருக்கு சிறப்புச் சலுகை

கொழும்பு, ஓக. 13
கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர் இந்தியாவிலிருந்து வருகை தரும் இலங்கைப் பிரஜைகள் வெளியுறவு அமைச்சின் ஒப்புதலைப் பெறவேண்டிய அவசியம் இல்லை என்று இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த பயணிகள் இலங்கைக்கு வந்தடைந்ததும், விமான நிலையத்தில் பி.சி.ஆர்.சோதனைக்கு மாத்திரம் உட்படுத்தப்படுவர்.

எனினும் இந்தியாவைத் தவிர பிற நாடுகளிலிருந்து வருகை தருபவர்களுக்கான செயற்பாட்டு விதிமுறைகளில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார். (4)

## பொலிஸ் சார்ஜன்ட் கொரோனாவால் சாவு

மட்டக்களப்பு, ஓக. 13
மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த சக்தி வடிவேல் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி பொலிஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். (4)



## சுகாதார ஆலோசனைகளுடன் போக்குவரத்துக்கள் தொடரும்

கொழும்பு, ஓக. 13
சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக, பொதுப்போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று செயற்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுப் போக்குவரத்துச் சேவைகளை மட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் இதுவரை அறிவுறுத்தவில்லை.

நாடு இக்கட்டான கட்டத்தைக் கடந்து வருவதால், பஸ்கள் மற்றும் ரயில்களைப் பயன்படுத்தும்போது பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்துகின்றோம்.


ஏனைய விதிமுறைகள் தளர்த்தப்பட்ட போதிலும், மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவில்லை.

அத்தியாவசிய தொழிலாளர்கள் மற்றும் அவசர தேவைகளுக்காக மட்டுமே மாகாணங்கள் முழுவதும் பயணம் செய்வதற்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் செயற்பாட்டில் உள்ளன.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் ஆலோசனைப்படி, இந்த வாரத்திலிருந்து மாகாணங்களுக்கு இடையேயான பஸ்கள் மற்றும் ரயில்களில் சோதனைகள் அதிகரிக்கப்படும். -என்றார். (4)

## கர்ப்பிணிகள் அச்சமின்றி தடுப்பூசியை ஏற்றலாம்!

### மகப்பேற்று நிபுணர் ஆலோசனை



கொழும்பு, ஓக. 13
கொரோனாத் தடுப்பூசி ஏற்றிய பின்னர் பிரசவம் இடம்பெற்ற தாய்மாருக்கும், சேய்க்கும் எவ்வித பாதிப்புக்களோ அல்லது பக்க விளைவுகளோ ஏற்படவில்லை. எனவே எவ்வித அச்சமும் இன்றி கர்ப்பிணிகள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மகப்பேற்று மற்றும் நரம்பியல் விசேட மருத்துவ நிபுணர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாதம் 24 தொடக்கம் 31ஆம் திகதி வரையான ஒரு வாரத்தை கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த கர்ப்பிணிகளில் பெருமளவானோர் முழுமையாக தடுப்பூசி பெறாதவர்களாவர். அதிஷ்டவசமாக ஒரு தடவையேனும் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட கர்ப்பிணிகள் தொற்றுக்கு உள்ளானாலும், அவர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கவில்லை.

தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதால், திருமணத்தின் பின்னர் குழந்தையின்மை ஏற்படுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. கொரோனாத் தொற்றுக்கும் கர்ப்பத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. எனவே இந்த விடயத்தில் அச்சமடையத் தேவையில்லை. என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறிய வைரஸ்களுக்கு தடுப்பூசிகள் பாதுகாப்பு தராது

## துறைசார் நிபுணர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 13**

**உருமாறி வரும் வைரஸ்களை எதிர்க்க, தடுப்பூசிகள் முழுமையான பாதுகாப்பை வழங்கும் என்று உத்தரவாதமளிக்க முடியாது. எனவே முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வைரஸ்நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் நதீக ஜானகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆரம்பத்தில் காணப்பட்ட வைரஸ் தொற்றிலிருந்து சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத போதிலும், ஓரளவு தப்பிக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் டெல்டா வைரஸ் தொற்றிடமிருந்து அவ்வாறு தப்பிக்க முடியாது.

குறிப்பாக மூடிய அறைகளில் காற்று குளிரூட்டி (ஏ.சி.) காணப்பட்டால் வைரஸ் பரவக் கூடிய வேகம் அதிகமாகக் காணப்படும். எனவே இவ்வாறான இடங்களில் இரண்டு முகக்கவசங்களை அணிந்து மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இரண்டாவது கட்டமாகவும் தடுப்பூசியைப் பெற்று இரு வாரங்களின் பின்னரே முழுமையான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கப்பெறும். முழுமையான நோய் எதிர்ப்பு கிடைக்கப் பெற்றதன் பின்னர் தொற்றுக்கு உள்ளானாலும் இறப்பைத் தவிர்க்க முடியும்.

ஆனால் இதனை உறுதியாக நம்பிக் கொண்டிருக்க முடியாது. காரணம் வைரஸ்க்கள் காலம் செல்லச்செல்ல மாற்றமடையும் போது, தடுப்பூசிகள் அவற்றுக்குச் சவாலாக அமையாது. உருமாறி வரும் வைரஸ்க்களுக்கு தடுப்பூசி சவாலாக அமையாது. எனவே தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதோடு, வைரஸ் பரவாமலும் தடுக்க வேண்டும். முதலாவது கட்டமாக மாத்திரம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களை முழுமையான நோய் எதிர்ப்பு சக்தி உடையவர்களாகக் கருத முடியாது. -என்றார். (4)

# நடமாடும் சேவையூடாக கொரோனாத் தடுப்பூசி!

கொழும்பு, ஓக. 13
சிறப்பு நடமாடும் வாகனங்கள் ஊடாக கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




முதியவர்கள், நோய்ப் பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள், ஊனமுற்றவர்கள், பலவீனமானவர்களுக்கு முன்னுரிமை வழங்கி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தை அடிப்படையாக கொண்டு இந்த நடமாடும் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஆரம்ப கட்டமாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் அவசியம் உடையவர்கள் இராணுவ மருத்துவப் படையினருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்காக 10 சிறப்பு நடமாடும் வாகனங்கள் தயார் நிலையில் உள்ளன. இராணுவ நோய் தடுப்பு மற்றும் மனநல மருத்துவ பணிப்பகத்தை 1906 அல்லது 0112860002 ஆகிய இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு முன்பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கான தடுப்பூசி வீடுகளுக்கு நேரடியாக வருகை தந்து வழங்கப்படும் என்று கொவிட் 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் அறிவித்துள்ளது. (4)

# தம்மிக்க பாணிக்கான அனுமதிப்பத்திரம் ரத்து!

கொழும்பு, ஓக. 13
கேகாலையைச் சேர்ந்த நாட்டு மருத்துவரான தம்மிக்க பண்டாரவால் தயாரிக்கப்பட்ட கொரோனாப் பாணிக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று ஆயுர்வேத ஆணையாளர் மருத்துவர் தம்மிக அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த பாணி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக பரிசோதனையில், அதன் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

இதனால் தம்மிக்க பாணிக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு ஒரு வகையான பாணியைத் தயாரித்து பிரபலமான தம்மிக்க பண்டார, தற்போது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# வவுனியாவில் மேலும் 84 பேருக்கு கொவிட்

வவுனியா, ஓக. 13
வவுனியாவில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் மற்றும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் ஆகியோருக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் 84 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




நெளுக்குளம், சிறிநகர், அண்ணாநகர், அவுசலப்பிட்டிய, தவசிகுளம், சின்னச்சிப்பிகுளம், நேரியகுளம், சின்னப்புதுக்குளம், கனகராயன்குளம், அரசடிக்குளம், இராசேந்திரங்குளம், தம்பனைபுளியங்குளம், கல்மடு, சிறிராமபுரம், கல்குண்ணாமடு, மகாறம்பைக்குளம், சாந்தசோலை, சிறைச்சாலை, சுகாதார திணைக்கள விடுதி, இலங்கை போக்குவரத்துச் சபை, திருநாவற்குளம், சுந்தரபுரம், நெடுங்குளம், நெடுங்கேணி, நெல்வேலிக்குளம், சிவபுரம், போகவ்வேவ, தாலிக்குளம் மற்றும் வைரவபுளியங்குளம் உள்ளிட்ட இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் எடுத்துள்ளனர். (4,18)

# சிறுவர்களுக்கு வீட்டில் சிகிச்சை

கொழும்பு, ஓக. 13
கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் இரண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை, அவர்களது வீடுகளிலேயே தங்கவைத்து சிகிச்சை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று விசேட மருத்துவர் ஷன்ன டீ சில்வா தெரிவித்துள்ளார்.

நோய் அறிகுறிகள் தென்படாத மற்றும் சிறு நோய் அறிகுறிகள் தென்படுகின்ற சிறுவர்களை பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

அதற்கமைவாக தொற்றா நோய் மற்றும் நீண்ட கால நோய்களுக்காக சிகிச்சைகளைப் பெறாத சிறுவர்களுக்கு வீடுகளில் சிகிச்சை வழங்கப்படும். வீடுகளில் சிகிச்சை பெறும் சிறுவர்களை அவதானித்துக்கொள்ள வேண்டியது, வீட்டிலுள்ள மூத்தவர்களின் பொறுப்பு. அவர்களுக்கு தொலைபேசியூடாக வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைய சிகிச்சைகளை வழங்க வேண்டும். இதற்காக 1390 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# 700 கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று

## 19 பேர் உயிரிழப்பு



கொழும்பு, ஓக. 13
700 கர்ப்பிணிகள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் இவர்களில் பெருமளவானோர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போது தொற்றுக்கு உள்ளாகும் கர்ப்பிணிகளில் பலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலைமையில் உள்ளனர். இதனால் எதிர்காலத்தில் கர்ப்பிணிகளின் உயிரிழப்பும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க சகலரும் தாமதிக்காது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கர்ப்பிணிகள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர்களுக்கு ஏதேனும் சிக்கல் அல்லது பக்க விளைவுகள் ஏற்படுகிறதா என்பது தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகிறது. இலங்கையில் அவ்வாறான சம்பவங்கள் பதிவாகவில்லை. ஆரம்பத்தில் சிக்கல் நிலையிலுள்ள கர்ப்பிணிகளுக்கு மாத்திரம் தடுப்பூசி வழங்கப்பட்டது. ஆனால் தற்போதுள்ள அபாய நிலைமையைக் கருத்தில் கொண்டு சகல கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசி வழங்கப்படுவதோடு, கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை மேலும் மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சுமார் 2 லட்சம் கர்ப்பிணிகள் உள்ளனர். ஆனால் இவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் மாத்திரமே தடுப்பூசி பெற்றுள்ளனர். தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த தாய்மாரில் 75 வீதமானோர் நீரிழிவு உள்ளிட்ட நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள். கனிசமானோர் எவ்வித நோயும் அற்ற இளம் கர்ப்பிணிகள். எனவே சகல கர்ப்பிணிகளும் தாமதிக்காது தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் -என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி நீக்கப்பட்டாலும் நஷ்டம் விலை அதிகரிப்பு அவசியம்

## பால்மா இறக்குமதியாளர்கள் கோரிக்கை

**கொழும்பு, ஓக. 13**

**இறக்குமதிக்கான வரியை அரசு நீக்கினாலும், ஒரு கிலோ பால்மாவால் 200 ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது. எனவே விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் பால்மா இறக்குமதியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் லக்ஸ்மன் வீரசூரிய தெரிவிக்கையில்,

இறக்குமதி வரிகளை நீக்கினாலும், பால்மாவை இறக்குமதி செய்ய முடியாத நிலை உள்ளது. வரிகள் நீக்கப்பட்டுள்ளமையால், ஒரு கிலோ பால்மாவுக்கான நஷ்டத்தை 100 ரூபா வரை மாத்திரமே ஈடுசெய்ய முடியும். பிற நாடுகளில் இருந்து பால்மாவை இறக்குமதி செய்யும்போது, கடந்த 3 மாதங்களில் பெற்றுக்கொண்ட பால்மாவுக்கான பணத்தை வழங்க வேண்டும். அதனைச் செலுத்துவதற்கான நிலைமை தற்போது இல்லை. இந்த நிலையில் 200 ரூபா விலை அதிகரிப்பு அவசியம்.என்றார். (ம-4)



# போர்ட்சிற்றியில் பணியாற்றும் இலங்கையருக்கு துன்புறுத்தல்?

கொழும்பு, ஓக. 13

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் பணியாற்றும், இலங்கையர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்ற பின்னர், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மட்டுமே அவர்களுக்கு வீட்டுக்குச் செல்ல வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்கள் பணிக்குத் திரும்பும் போது 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களுக்கு இவ்வாறு இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்ற போதும், சீன ஊழியர்கள் இரவு நேரங்களில் கொழும்பில் உள்ள மசாஜ், பார்லர் மற்றும் சூதாட்ட விடுதிகளுக்கு செல்ல வாய்ப்பு வழங்கப்படுகின்றது என்று அந்தச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-4)



# ஒன்லைன் மூலமாக பிறப்புச் சான்றிதழ்!

கொழும்பு, ஓக. 13

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களை, ஒன்லைன் மூலமாக வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் பதிவாளர் திணைக்களம் கடந்த 2ஆம் திகதி முதல் இந்தச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய திட்டத்தின் ஊடாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் வழங்குவதன் ஊடாக முறைக்கேடுகளை தவிர்க்கவும், துரித கதியில் சேவையைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

1960ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு, விவாகம் என 36 மில்லியன் சான்றிதழ்கள் பதிவாளர் திணைக்களத்தின் மத்திய செயற்பாட்டு கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த சேவையை பெற்றுக்கொள்ள விரும்புவோர் www.rgd.gov.lk  என்ற இணையத்தள முகவரிக்குச் செல்வதன் மூலம், அல்லது 011 2889518 எனும் தொலைப்பேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டும் இந்தச் சேவைக்குரிய விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# வீட்டுப்பணித் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துக

கொழும்பு, ஓக. 13

வீட்டுப்பணித் தொழிலாளர்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வீட்டுப்பணித் தொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பாக 14 வருடங்களாக போராடிய போதும், டயகம சிறுமி ஹிஷாலினியின் விவகாரத்தின் பின்பே பலர் கண் திறந்துள்ளனர்.

நாம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் இதுவரை சரியான உரிமைகள் கிடைக்கவில்லை. எமக்கு உரிய காலத்தில் போதியளவு தொழில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பின் ஹிஷாலினியின் சம்பவம் போன்ற சம்பவங்கள் நடந்திருக்காது. இன்னும் நூற்றுக் கணக்கான ஹிஷாலினிகள் மறைந்து காணப்படுகின்றனர். எனவே வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கான போதிய தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-4)

# இலங்கை குடும்பத்தினர் பிரான்ஸில் படுகொலை

கொழும்பு, ஓக. 13

பிரான்ஸில் புலம்பெயர்ந்து வசித்து வந்த இலங்கைக் குடும்பத்தினர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் பரிஸ் புறநகர்ப் பகுதியான வால்துஓஸ் பிராந்தியத்தில் நடந்துள்ளது.


52 வயதான மனைவியும், 21 வயதான மகளும் கழுத்தறுக்கப்பட்டும், குத்தப்பட்டும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இரவுப் பணி முடித்து, வீடு திரும்பிய குடும்பத்தலைவர் தனது 52 வயதான மனைவியும், மகளும் அவர்களது படுக்கை அறையில் சடலங்களாகக் கிடந்ததை கண்டு அவர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

அங்கு விரைந்த பொலிஸாரால் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கருதப்படும் ஒரு கூரிய கத்தி அந்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டது. சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டில் மிகவும் அதிர்ச்சியுற்ற நிலையில் இருந்த தந்தையும், இரண்டு ஆண் பிள்ளைகளும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்தபோது ஒரு மகன் அங்கிருந்தார். மற்றவர் பிறிதொரு இடத்தில் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கொலையாளி குடும்பத்துடன் தொடர்புடையவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மீண்டும் மறியல்

கொழும்பு, ஓக. 13

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் சிறி ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் அமில சந்தீப உள்ளிட்ட நால்வரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கடுவலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 3ஆம் திகதி கொத்தலாவல சட்ட வரைவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த போது, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் மஹரகம பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு காயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நால்வரும் நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் னவைக்கப்பட்டிருந்தனர். குறித்த வழக்கு விசாரணை கடுவலை பதில் நீதிவான் சந்யா தல்துவ முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்கள் தனிமைப்படுத்தலில் இருப்பதால் நீதிமன்றில் முற்படுத்தப்பட வில்லை. எனினும் வழக்கு விசாரணையில் அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-4)



# இன்றைய நாள்

**மேடம்**: புதிய முயற்சிகளை இன்று தவிர்க்க வேண்டாம். அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்த விஷயங்கள் அனுகூலமாக முடியும். அனுகூலம் உண்டா கும்.

**இடபம்**: உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறி நிம்மதி அளிக்கும். மற்ற வர்களின் கோபத்தால் உங்களுக்கு பாதிப்பு இருக்காது. தாய்மாமன் ஆதரவும், எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும்...

**மிதுனம்**: எதிர்பாராத செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும் நாள். திடீர் பயணம் நேரலாம். சம்பவமொன்று நடைபெறும்.

**கடகம்**: அதிக செலவாகும் என்று நினைத்த விஷயம் குறைந்த செலவில் முடியும். மரியாதையும் உயரும். சொத்து தகராறுகள் அகலும். திட்டங்கள் வெற்றி பெறும்.

**சிம்மம்**: சகபணியாளர்கள் உங்கள் சொல்லிற்கு மதிப்புக் கொடுப்பார்கள். பூரம்: நிலையான வருமானத்திற்கு வழிபிறக்கும். மன நிறைவு உண்டு. பெற்றோரின் ஒத்துழைப்போடு பணி ஒன்றை முடிப்பீர்கள்.

**கன்னி**: நண்பர்கள் நல்ல செய்தியை கொண்டு வந்து சேர்ப்பர். பண வரவு திருப்தி தரும். திட்டமிட்ட விஷயத்தில் திடீர் மாற்றம் நிகழும். பெண்கள் குடும்ப நலனில் மிகுந்த அக்கறை கொள்வார்கள்.

**துலாம்**: உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பயண ஙளை மாற்றி அமைப்பதால் நன்மை நிகழும். கலகலப்பான நாள். வெற்றிக்கு நல்லவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


**விருச்சிகம்**: வீடு, நிலம் சம்பந்தமான முயற்சியில் அனுகூலம் உண்டு. வியாபார முன்னேற்றம் உண்டு. மனதில் இருந்த பயம் நீங்கும். வம்பு, வழக்குகள் தீரும். வளம் காணும் நாள்.

**தனுசு**: நேற்றைய சேமிப்பு இன்றைய செலவிற்கு கைகொடுக்கும். உடன் பிறப்புகள் வழியில் மகிழ்ச்சியான சம்பவம் நடைபெறலாம்.

**மகரம்**: உடல் நலத்தில் கவனம் தேவைப்படும் நாள். உங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களின் சந்திப்பு கிட்டும். நேற்றைய நிகழ்வுகளால் ஏற்பட்ட வருத்தம் மறையும்.

**கும்பம்**: சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். எதிர்கால முன்னேற்றம் கருதி முயற்சி எடுப்பீர்கள். வரவை விட செலவு கூடும்நாள்.

**மீனம்**: வாக்குவாதத்தை தவிர்க்கலாம். நிதி பற்றிய கவலை வேண்டாம். வரவு திருப்தி அளிக்கும் என்றாலும் விரயங்களும் ஏற்படும். விரோதங்கள் விலகும்.



# ஓடிடியில் களமிறங்கும் சந்தானத்தின் 3 படங்கள்

நகைச்சுவை நடிகர்களில் முன்னணியாக வலம்வந்த சந்தானம் தற்போது படங்களில் நாயகனாக களமிறங்கியுள்ளார். கடைசியாக வெளியான அவரின் 'பாரிஸ் ஜெயராஜ்' படம் சிறப்பான வரவேற்பைப் பெற்றது. தற்போது அவர் நடித்து முடித்துள்ள 'சபாபதி, 'சர்வர் சுந்தரம்' மற்றும் 'டிக்கிலோனா' ஆகிய படங்கள் ரிலீசுக்கு தயார் நிலையில் உள்ளன. இந்த நிலையில் கொரோனா காரணமாக திரையரங்கு களில் வெளியிட முடியாத சூழ்நிலையில் ஓடிடியில் வெளியாகவுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இது தொடர்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.














கடைநிலை ஊழியன்

ஈகோ இல்லாதவர் என்று எவரும் இல்லை.. அதன் அளவு மட்டுமே ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது !!




# உண்மை அன்பு



பிரபல ஹாலிவுட் "ஜேம்ஸ் பாண்ட்" நடிகர் பியர்ஸ் பிராஸ்னிடம் அவரது மனைவியின் உடல் பருமன் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் சொன்ன பதில் இதுதான் :

"எங்கள் நண்பர்கள் என் மனைவிக்கு எடை குறைப்பு அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம் என ஆலோசனை சொன்னார்கள். நான் அவரது உடலின் ஒவ்வொரு வளைவையும் நேசிக்கிறேன். என் கண்களுக்கு அவரே உலகின் மிக அழகிய பெண். கூடவே, எங்கள் ஐந்து குழந்தைகளுக்கு அவர் அம்மா.

கடந்த காலத்திலும் அவரை அவரது அழகுக்காக நேசித்ததை விட, ' அவருக்காக' நான் நேசித்ததே அதிகம். இப்போதோ கூடுதலாக அவர் எங்கள் குழந்தைகளுக்கு தாய் என்பதாலும், எப்போதும் அவரது அன்புக்கு தகுதியானவனாக இருக்கவே நான் விரும்புகிறேன்."

# 'பீஸ்ட்' படத்துக்கு விசிட் செய்த டோனி


பீஸ்ட் படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்று வரும் நிலையில், அங்கு திடீர் விசிட் அடித்த மகேந்திர சிங் டோனி, நடிகர் விஜய்யை சந்தித்து பேசினார். நடிகர் விஜய் நடிப்பில் தற்போது பீஸ்ட் திரைப்படம் உருவாகி வருகிறது.

நெல்சன் இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் உள்ள தனியார் ஸ்டூடியோவில் நடைபெற்று வருகிறது.

அதேபோல் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி வீரரும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டனுமான மகேந்திர சிங் தோனி நடிக்கும் விளம்பர படப்பிடிப்பும் அதே ஸ்டூடியோவில் நேற்று நடைபெற்றது.

அப்போது பீஸ்ட் படப்பிடிப்பு தளத்துக்கு திடீர் விசிட் அடித்த டோனி, அங்கு நடிகர் விஜய்யை சந்தித்து பேசினார்.

அப்போது எடுத்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 வீதமான பகுதி தலிபான்கள் வசம்

காபூல், ஓக. 13


**ஆப்கானிஸ்தானில் 65 வீதமான பகுதி தலிபான்களின் வசம் சென்றுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன் ஆப்கானிஸ்தான் இராணுவம் மனதளவிலும் உடலளவிலும் பலவீனமடைந்து விட்டது என்றும் அந்த ஊடகங்களின் செய்திக் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**



அமெரிக்கப் படைகள் வெளியேறி வரும் நிலையில் மறுமுனையில் தலிபான்கள் ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த இரு வாரங்களில் மட்டும் சுமார் 8 மாகாணங்களை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். ஆப்கானிஸ்தானின் முக்கிய மாகாணங்களில் ஒன்றான மஸார் மாகாணத்தில் தற்போது இரு தரப்புக்கும் இடையே உச்சக்கட்டப் போர் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் இராணுவத்தினரை உற்சாகப்படுத்த ஆப் கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானி அந்தப் பகுதிகளுக்குச் சென்று இராணுவத்தினருடன் பேச்சு நடத்தி வருகின்றார் என்றும் இராணுவத் தளபதிகளுடன் ஆலோசித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில், குறித்த மாகாணமும் தலிபான்களிடம் விழும் நிலையே உள்ளது என்றும் இது வரை ஆப்கானிஸ்தானில் 65 வீதமான பகுதிகளைத் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர் என்றும் தகவல்கள் வந்துள்ளன. தற்போது போர் இடம்பெற்றுவரும் மஷார் பகுதி இராணுவத் தளபதி அப்துல் ரசீட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவரின் தலைமையில்தான் அமெரிக்கப் படைகளும் ஆப்கான் படைகளும் இணைந்து பல்லாயிரக் கணக்கான தலிபான்களை கடந்த 2001ஆம் ஆண்டு கொன்றொழித்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)






# கிரீஸ் காட்டுத் தீ: பிரதமர் மன்னிப்பு!

ஏதென்ஸ், ஓக. 13

கிரீஸில் கடந்த 10 நாள்களாக தொடர்ந்து பற்றியெரியும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டார் கிரீஸின் பிரதமர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டு மக்களின் வலியை என்னால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது. நான் மன்னிப்பு கேட்டுக் கொள்றேன். தங்களுடைய இடமும், வீடும் நெருப்புக்கு இரையாவதை யார் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்தோம். ஆனால் அது போதவில்லை. தோல்விகள் கண்டறிந்து விரைவில் சரிசெய்யப்படும். காட்டுத் தீயால் ஏற்பட்ட சேதத்தைச் சரி செய்ய 500 மில்லியன் யூரோ ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)



கிரீஸில் கடந்த 10 நாள்களாக கடும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ள நிலையில், காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடி வருகின்றனர். காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக தண்ணீரை நிரப்பிக்கொண்டிருக்கும் தண்ணீர்க்காவி உலங்கு வானூர்திகளின் ஒளிப்படமே இது. (ம)



# ஆப்கான் இராணுவத்தினர் பலர் தலிபான்களிடம் சரணடைந்தனர்

காபூல், ஓக. 13

ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் பகுதியில் தலிபான்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்று வந்த நிலையில், நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தலிபான்களிடம் சரணடைந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தலிபான்களிடம் சரணடைந்த பெயர் குறிப்பிட விரும்பாத ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், 'குண்டூஸ் விமானநிலையத்தின் அருகே தலிபான்கள் தொடர்ச்சியாக பீரங்கிக்குண்டுகளை ஏவி தாக்குதல் நடத்தினர். எங்களுக்கு வேறு வழியில்லை. அதனால் சரணடைந்தோம். ஏற்கனவே நூற்றுக்கணக்கான வீரர்கள் சரணடைந்துவிட்டனர். இப்போது நாங்கள் அனைவருமே மன்னிப்புக்காகக் காத்திருக்கிறோம்' என்று வேதனையுடன் கூறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை ஆதரித்தோர் இன்று எதிரிகளாகினர்

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 13

பொதுஜன பெரமுன ஆட்சியமைப்பதற்கு அரச சேவையாளர்கள் பெருமளவில் ஒத்துழைப்பு வழங்கினர். இன்று அவர்களே அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமையில் உள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையைப் போன்று இன்று நாட்டு மக்களின் நிலைமை உள்ளது. ஒருபுறம் கொவிட் வைரஸ் தாக்கம். மறுபுறம் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் தட்டுப்பாடு.

நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் குறைகளைச் சுட்டிக்காட்டுகிறோம்.

மக்களைப் பலி கொடுத்து அதனூடாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் எமக்குக் கிடையாது.

தடுப்பூசி செலுத்துதல் மாத்திரம் கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறை அல்ல என்று விசேட மருத்துவர்கள் குறிப்பிடுகின்ற நிலையில், நாட்டைத் திறந்து நாட்டு மக்களை ஒன்றுகூட்டி தடுப்பூசி செலுத்தும் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் மக்களின் கைகளில் பணப்புழக்கம் அதிகரித்தது. ஆனால், பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு மக்களிடமிருந்து நிதியைப் பறிக்கின்றதே தவிர, மக்களுக்கு நிதி வழங்கப்படவில்லை.

2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு ஆட்சியமைத்திருந்தால், ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் வேதனப் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு வழங்கப்பட்டிருக்கும் -என்றார். (ம-4)

# அரச அதிகாரிகள் சிலருக்கு பகுதியளவில் மூளை பழுது

## ஆளுந்தரப்பு எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 13

**அரச அதிகாரிகள் சிலருக்கு பகுதியளவில் மூளை பழுதடைந்திருக்க வேண்டும். அதனால் தான் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கின்றனர் என்று ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை குறிப்பிட்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான அதிகாரிகளால் நாடு நிர்வகிக்கப்பட்டால் ஏற்படும் சவால்களை நாட்டு மக்கள் எதிர்கொள்ள நேரிடும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் விசேட மருத்துவர்களின் கருத்துக்களுக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும். இல்லாவிடின் பெரிய விளைவுகள் ஏற்படும்.


கொரோனாத் தொற்றாளர்கள் குறைந்தளவு அடையாளப்படுத்தப்பட்ட போது நாடு முழுமையாக முடக்கப்பட்டது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் பின்பற்றப்பட்டன. இதனால் நெருக்கடிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய முடிந்தது.

தற்போது நாட்டில் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், நாட்டை குறைந்தபட்சம் இரண்டு வாரத்துக்காவது முடக்க வேண்டும் என்று விசேட மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கைக்கு உரிய தரப்பினர் செவிசாய்க்க வேண்டும் - என்றார். (ம-4)

# எரிவாயுத் தட்டுப்பாட்டுக்கு உடனடித் தீர்வு வழங்குக

## சிற்றுண்டி உரிமையாளர் சங்கம் கோரிக்கை



கொழும்பு, ஓக. 13

சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை மற்றும் அரசு உடனடித் தீர்வை வழங்க வேண்டும். இல்லையெனில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இலங்கை சிற்றுண்டி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் முன்னாள் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவிக்கையில்,


கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சமையல் எரிவாயுப் பற்றாக்குறையால் மூன்றுவேளை உணவு உட்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓரிரு வாரங்களில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறும் அமைச்சர்களுக்கு, மக்களின் பணத்தில் இலவசமாக உணவு கிடைக்கும். எனவே அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் சில ஹொட்டல்கள் கூட மூடப்பட்டுள்ளன. சமையல் எரிவாயு தொடர்பில் காணப்படுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும். - என்றார். (ம-4)

# கொரோனா தொற்றாளர் தப்பியோட்டம்

கொழும்பு, ஓக. 13

காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கொரோனாத் தொற்றாளர் ஒருவர் தப்பிச்சென்றுள்ளார். மருத்துவமனையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவர் மருத்துவமனை விடுதியில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் இரவு அவர் தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்ய யக்கலமுல்ல பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-4)





# ஐஸ் போதைப் பொருளுடன் மீராவோடையில் ஒருவர் கைது

வாழைச்சேனை, ஓக. 13

ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வாழைச்சேனை மீராவோடை பகுதியில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 12 கிராம் ஐஸ் போதைப் பொருள், போதை மாத்திரைகள், ஒரு தொகைப் பணம் மற்றும் போதைப்பொருள் நிறுவைத் தராசு என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ-150)

# இலங்கைப் பெண் உயிரிழப்பு: மன்னிப்புக் கோரியது ஜப்பான்

கொழும்பு, ஓக. 13

ஜப்பானில் குடியேற்ற நிலையத்தில் உயிரிழந்த, இலங்கைப் பெண் தொடர்பான சம்பவத்துக்கு, ஜப்பானின் நீதி அமைச்சர் யோகோ காமிகாவா மன்னிப்புக் கோரியுள்ளார்.

நாகோயா நகரத்தில் உள்ள குடியேற்ற நிலையத்தின் பொறுப்பற்றதன்மையின் விளைவாக கடந்த மார்ச் மாதம் இலங்கையைச் சேர்ந்த 33 வயதான விஷ்மா சந்தமாலி உயிரிழந்தார். காலாவதியான மாணவர் விசாவில் விஷ்மா சந்தமாலி ஜப்பானில் இருந்தமை தெரியவந்தமையால், அவர் குடியேறியவர்களுக்கான தற்காலிக தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார். பாதிக்கப்பட்டவருக்கு தேவையான மருத்துவ உதவி மறுக்கப்பட்டது என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர்.

விசாரணையின் போது, நிலையத்தின் ஊழியர்கள் தங்கள் கடமைகளைப் புறக்கணித்தனர் என்று தெரியவந்துள்ளது.

குறிப்பாக மருத்துவப் பரிசோதனைக்கான பெண்ணின் கோரிக்கைகள் குறித்து அவர்கள் நிர்வாகத்துக்கு தெரிவிக்கவில்லை. மேலதிகமாக இலங்கைப் பெண் இறந்த நாளில் ஒரு அம்புலன்ஸ் கூட வரவழைக்கப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இதையடுத்தே ஜப்பானின் நீதி அமைச்சர் மன்னிப்புக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 07.05.1947 | 16.07.2021 |

கடந்த 16.07.2021 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தாயார்

### அமரர் ஞானேஸ்வரி சரவணமுத்து

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (13.08.2021) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் சபிண்டீகரணக் கிரியை 15.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**பட்டினசபை ஒழுங்கை,**
**மானிப்பாய்.**
**077 078 4415,**
**077 952 7293**

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**


## Taxation Classes

in Tamil and English

For
I Management Final Year II H.N.D.A 1st Year III B.Com

Contact: K.Thangarajah
B.Sc (P.F.T) Sp, Dip.in Edu
Certificate in Computerized Acc

T.P.: 077 543 9914
021 222 8371


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 05 | 10 |
| 07 | 08 |
| 1946 | 2021 |

### திருமதி. தில்லைநாயகி கந்தசாமி

மாதகல் மேற்கு மற்றும் அராலியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தில்லைநாயகி கந்தசாமி அவர்கள் கடந்த (11.08.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருவாளர் வேலுப்பிள்ளை கந்தசாமி (முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி மேலாளர்) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற நடராசா- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் மகாதேவன் (கனடா), சண்முகநாதன் (ஜேர்மனி), குகதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் லகுரஞ்சினி, சுதாகர், விஜயகுமார், மோகனகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சற்குணானந்தன், பாமினி, கீதா, லோஜி ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்திரிக்கா,சோபிகா, சயூரிகா, சரண்யா, சாருஜன், மிதுர்ஷன், கீர்த்தனன், சஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.08.2021) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
லகுரஞ்சினி (ஜேர்மனி) : 004917671215859
சுதாகர் (ஜேர்மனி) : 004917652699636
விஜயகுமார் (இலங்கை) : 0094779238976
மோகனகுமார் (கனடா) : 0016472907284

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

தவறான முடிவெடுத்து நஞ்சு அருந்திய இளம் குடும்பத்தலைவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சுழிபுரத்தைச்சேர்ந்த 30 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (த-26,27)


### தேவை

Omini- E Van தேவை
விற்பனைக்கு இருந்தால் தொடர்புகொள்ளவும்.
077 721 8140

### தேவை

**பொதி செய்பவர்**


யாழ்நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பொதி செய்பவர் தேவை. வயதெல்லை 21 - 30 இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல.: J/F 1029
மே / பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சைவ சமயக் கிரியைகள்

புதுமனைப் பிரவேசம், சாந்திகள்,
அந்திமகாலக் கிரியைகள்,
அந்தியேட்டிக் கிரியைகளுக்கு
சைவக்குருக்களை நாடவும்
B.U.M.குருக்கள் (மீசாலை)
076 909 7435, 077 328 0463


## மரண அறிவித்தல்



தோற்றம்
01.10.1943

மறைவு
07.08.2021

### செல்லத்துரை சுப்பிரமணியம்
### (அப்பு அண்ணை C.T.B மணியம்)

யாழ்.சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுப்பிரமணியம் (அப்பு அண்ணை C.T.B மணியம்) அவர்கள் கடந்த (07.08.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், சுழிபுரத்தைச் சேர்ந்த கதிரவேலு செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், லட்சுமி (இராசாத்தி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், சுரேஸ்குமார் (சுரேஸ் - லண்டன்), சுவர்ணலதா (சுவர்ணா - சுவிஸ்), கருணாகரன் (கருணா - ஜேர்மனி), பெறாமகன் நிரோஜன் (நிரோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தநாயகி (சாந்தி), இரவீந்திரராஜா (ரவி), பிரசாந்தி (சாந்தி) ஆகியோரின் அன்பு மாமனாரும், குணசேகரம் (குணம்), கலைவாணி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிறேமா, அருள்ராஜா, அனுசம்மா, சிவஞானம், நித்தி, இன்பம், பரமானந்தம், புஸ்பராணி, திருஞானம், சிவசுந்தரம், மாலா ஆகியோரின் அன்பு மச்சானும், பிரித்திகா, ஆர்த்திகா, ரிசான், இலக்கியா, சாதனா, அபிராமி, தேனுஜன், யதுரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கடந்த (07.08.2021) சனிக்கிழமை நடைபெற்றது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 956 1098**

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### தம்பிஜயா ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற பட வரைஞர் – கொழும்பு மாநகர சபை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா ஆறுமுகம் அவர்கள் நேற்று (12.08.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா பொன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா பூபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் மகாலெட்சுமி இராசலெட்சுமி, இரத்தினசிங்கம், மகேஸ்வரி, பரமேஸ்வரி, துரைசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற தருமலிங்கம், நவரத்தினம் மற்றும் இரத்தினராசா, கல்பனா, புஸ்பராசா, ரங்கநாதன், ராதா மற்றும் காலஞ்சென்ற கதிர்காமநாதன், செல்லபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் பொறளை இந்து மயானத்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**காளி கோவிலடி,**
**சில்லாலை தெற்கு,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 214 7702**

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1933



மறைவு 11 . 08 . 2021

### இரத்தினராசா கணபதிப்பிள்ளை

(யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - முன்னாள் விரிவுரையாளர், முன்னாள் யாழ் இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர்)

பண்டத்தரிப்பு வடலியடைப்பை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி (தேவிவாசம்) வதிவிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவருமான இரத்தினராசா கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (11.08.2021) புதன்கிழமை இரவு இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிபிள்ளை - அன்னம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற சாந்தகுணதேவியின் அன்புக் கணவரும், கணதீபன் (கொழும்பு), கார்த்திகா (அவுஸ்ரேலியா), செந்தூரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், செல்வராஜா, வாமதேவன், தில்லைநாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அழகேசன் (அவுஸ்திரேலியா), நிரோஷா ஆகியோரின் மாமனாரும், அம்பிகை (கனடா)யின் பெரியப்பாவும், சற்குணநாதன், சற்குணதேவி (கௌரி) ஆகியோரின் மைத்துனரும், நிவ்யன், ஜவின் (அஸ்வுரேலியா), தீக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**பிள்ளைகள்**
**க.செந்தூரன் - 077 300 0134**
**க்.கணதீபன் - 077 340 5893**

33, 4/3, 42 **ஆவது ஒழுங்கை,**
**வெள்ளவத்தை.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 18.12.1936

இறப்பு 12.08.2021

### பொன்னையா பஞ்சலிங்கம்

**Royal Lon Airforce - Telegraph Technical Officer (1956 – 1978), 1962 தேசியமட்டத்தில் 100 Yards ஓட்டப் போட்டியில் தேசிய ரீதியில் சாதனை, முன்னாள் சமாதான நீதவான், (பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் உப தலைவர் – யாழ்ப்பாணம், ஐக்கிய அமெரிக்கா தூதரதகப் பணியாளர். Lions Club of Jaffna golden star – உறுப்பினர்.)**

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (12.08.2021) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (மாத்தையா) தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற நகுலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுதர்சன், சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், றஜனி அவர்களின் அன்பு மாமனாரும், நிவேதன், தாணியா, சஞ்சுதா, ஹறினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசாம்பாள், செல்வத்துரை, கனகலிங்கம், தேவதாசன், பவானலட்சுமி, சிவலிங்கம் மற்றும் குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முருகேசு, வீரலட்சுமி, மனோன்மணி, வனசாட்சி, தேவராசா, நடேசர், பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.08.2021) வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 45,**
**விபுலானந்தர் வீதி,**
**அரியாலை**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**சுதர்சன் - மகன்**
**சுகிர்தா - மகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு பெறுகைக்கான அழைப்பு மருத்துவ உபகரணப்பொருட்கள் வழங்கல் - 2021


பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள்குழு தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரணபொருட்கள் விநியோகஸ்தர் களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| Line.Ministry/MEP/2021/04 | Immunoassay (Hormone) Analyzer | 01 | 52,000.00 |

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரணபொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொருபெறுகைக்கும் மேலேசொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாதமுறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents"என்றபடி வத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக் கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா2000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலகநாட்களில் 13.08.2021 தொடக்கம் 02.09.2021 வரையான காலப்பகுதியில் 09.00மணிதொடக்கம் 15.00மணிவரை நேரங் களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 03.09.2021 ஆந் திகதி 11.30 மணிக்குமுன்பதாகபதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை. முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 03.09.2021 ஆந் திகதி 11.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலை மனுதாரர்கள் அல்லதுஅவர்களின் பிரதிநிதிகள் முன்னிலை யில் திறக்கப்படும்.
- தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (T.P:021 229 0111, Fax : 021 2290 104) பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களம் முல்லைத்தீவி லிருந்துபெற்றுக்கொள்ளமுடி யும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினைமட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொருநிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்பணிமனை,**
**முல்லைத்தீவு**

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 01 . 1953 — மறைவு 11 . 08 . 2021

## திரு.இராமச்சந்திரன் இராதாகிருஷ்ணன்

**(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

குருநாகலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கலைவாணி வீதி. கோண்டா வில் வடக்கு. திருநெல்வேலி வடக்கையும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த இராமச்சந்திரன் இராதாகிருஷ்ணன் அவர்கள் கடந்த (11.08.2021) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரன்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான நடராசா-லீலாவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும். இராதா அவர்களின் அன்புக் கணவரும். அருணாசலம் (ஓய்வு பெற்ற அதிபர்), ஆனந்தராணி. பத்மினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும். கஜானன் (இலண்டன்). பைரவி (நியூசிலாந்து). வசீகரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சாரங்கன் (நியூசிலாந்து). சங்கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும். கார்த்திகா. கார்த்திகேயன். வைத்தியகுமார். உஷா. நிர்மலா. கல்யாணி. காலஞ்சென்ற குருபரன். ஜெய ரஞ்சினி. கணேசமூர்த்தி. தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுரபியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கடந்த (11.08.2021) புதன்கிழமை கோம்பயன் இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி - 077 046 7008**
**கஜானன் (மகன்)- [illegible]**
**பைரவி (மகள்)- [illegible]**
**வசீகரன் (மகன்) - 0061 433 953 363**

# தவிசாளரின் இழப்பு எமக்குப் பேரிழப்பே

## குருதிக்கொடையாளர் சமூகம்

யாழ்ப்பாணம், ஓக. 13

தவிசாளர் அமரர் கோணலிங்கம் கருணானந்தராசா குருதிக்கொடைக்கு பேருதவி புரிந்துள்ளார். இவரின் இழப்பு, குருதிக்கொடையாளர் சமூகத்துக்கு பேரிழப்பு என்று குருதிக் கொடையாளர் சமூகம் இரங்கல் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

கடந்த வருடத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குருதி வங்கிகளில் குருதிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட குருதித்தான முகாம்களை நடத்துவதற்கு நகரசபை மண்டபத்தை இலவசமாக வழங்கியதோடு பயணத் தடை நடைமுறையில் இருந்த காரணத்தால் குருதிக்கொடையாளர்களை ஏற்றி இறக்கும் பணிக்காக வாகனத்தையும் தந்துதவினார். அதுமட்டுமல்ல 60 ஆவது குருதி முகாமை சிறந்த முறையில் நடத்துவதற்கும்நகரசபை மண்டபத்தை வழங்கி குருதிக் கொடையை ஊக்குவித்துள்ளார்.

இது குருதிக் கொடைக்கு இவர் கொடுத்த முக்கியத்துவத்தையும் சமூகத்தின் மீது இவர் கொண்டிருந்த அக்கறையையும் கறைபடியாத கரங்களையும் வெளிக்காட்டியுள்ளது. குருதித்தான முகாம் நடை பெறுகின்ற நேரத்தில் தவிசாளர் என்ற பதவிக்கப்பால் எம்மோடு கூட இருந்து தேவையான உதவிகளை புரிந்து எமை ஊக்கப்படுத்தும் பண்பு கொண்டவர்.

இவரின் இழப்பு குருதிக்கொடையாளர் சமூகத்துக்குபெரும்இழப்பாகும்- என்றுள்ளது. (கு)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 20 . 12 . 1963 — மறைவு 12 . 08 . 2021

எமது நண்பன் பானுப்பிரியனின் தந்தை

**இராசலிங்கம் ரவீந்திரன்**

நேற்று (12.08.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்.**

# துயர் பகிர்கின்றோம்

இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும்.
சிறுப்பிட்டி நீர்வேலியை வசிப்பிடமாகக்கொண்டவரும் எமது சங்கத்தின்
கணக்குலிகிதராகக் கடமையாற்றியவருமான

## இராசலிங்கம் ரவீந்திரன்

தோற்றம் 20.12.1963 — மறைவு 12.08.2021



"மண்ணில் முளைத்த மரம் தன் விதைகளில்
உயிரதை விட்டுச் செல்லும் மண்ணைவிட்டு நீர்
சென்றாலும் மங்காதையா உம்முடைய
- நினைவுகள்....

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி.**

# மரண அறிவித்தல்



எமது கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் மகா வித்தியாலய
முன்னாள் ஆசிரியை மதிப்பிற்குரிய

## திருமதி செல்வபாக்கியம்

(செல்வம் ரீச்சர்)

யாழ். கரம்பொன் சுருவில் வீதியைப் பிறப்பிடமாகவும். பிரித்தானியா இல்வேட், எஸெக்ஸ் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசிரியை செல்வபாக்கியம் கடந்த 05.08.2021 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2021) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும். கோவிட் காலத்தினால் குடும்பத்தினரும் சிறியவட்டத்திலுள்ள நண்பர்களும் அமைதியான முறையில் அன்னாரின் இறுதிப்பயணத்தை நடத்த இருப்பதை கருணையுடன் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தகவல்: கரம்பன் சீரடி சாயி இல்லம்**
**ஸ்ரீ பொன்சாயி தொண்டர்சேவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சிப் பிரதேசசபை தவிசாளருக்கு தொற்று

கிளிநொச்சி, ஓக. 13
கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டிருந்தது. அதன் தொடராக அவருடன் தொடர்பிலிருந்த செயதியாளர் ஒருவருக்கு அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.
நேற்றுத் தவிசாளரும் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
இரண்டு தினங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.6)



கோப்பாய் சந்தியில்

## பாரவூர்தி – டிப்பர் விபத்து முறிந்தது சமிக்ஞை கம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் - கோப்பாய் சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில், வீதி சமிக்ஞை கம்பம் முறிந்து வீழ்ந்தது.
பாரவூர்தி ஒன்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் நேற்றிரவு மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது என்றும் அதன்போதே, வீதி சமிக்ஞை கம்பம் முறிந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.
அதனால் குறிப்பிட்ட நேரம் அந்தப் பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டது. கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-இ)

# சாவிலிருந்து மக்களைக் காக்க பொதுமுடக்கமே ஒரே வழி

*அரசிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது எதிர்க்கட்சி*

**கொழும்பு, ஓக. 13**
**கொரோனாத் தொற்று வேகமாக பரவிவருகின்றது. மக்களைக் காப்பாற்ற வேண்டுமெனில் நாட்டை முழுமையாக முடக்குவதைத்தவிர தற்போது வேறு வழியில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கியமக்கள்சக்தியின்தலைமை அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாத் தொற்று மோசமான நிலைமைக்கு வந்துள்ளது. நாட்டை முழுமையாக முடக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில்தான் நாம் இருந்தோம். ஆனால் மக்களை காப்பாற்ற வேண்டுமானால் முழு முடக்கத்தைத்தவிர தற்போது மாற்றுவழியே இல்லை. நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். அரசால் வெளியிடப்படும் தகவல்களையும் நம்பமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முழுமையான பொறுப்பு சுகாதார தரப்புக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் முன்னோக்கி பயணிக்க முடியாது. சுகாதார அமைச்சர், அவ்வமைப்பின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகிய மூவரும் தமக்கான பொறுப்பை சரிவர நிறைவேற்றவில்லை. இவர்கள் மாற்றப்பட வேண்டும்.
துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும், என்றார். (ஒ.44)

## மகோற்சவம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஓக. 13
பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய ஆவணி மகோற்சவம் இன்று ஆரம்பமாகவிருந்த நிலையில் நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தேவஸ்தான பரிபாலனசபை அறிவித்துள்ளது.
கொரோனா அச்சுறுத்தலால் ஆலய அர்ச்சகர்கள், பணியாளர்கள் மற்றும் உபயகாரர்களுடன் மாத்திரம் மகோற்சவத்தை நடத்துவதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.
உபயகாரர்கள் ஆலயத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டதாலும், நாட்டின் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதையும் கருத்தில் கொண்டு மகோற்சவத்தை நிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## மகனின் திருமண விருந்துபசாரத்தை நிறுத்திய அமைச்சர்



கொழும்பு, ஓக. 13
கோவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே தனது மகனின் திருமண விருந்துபசார நிகழ்வை இரத்துச் செய்துள்ளார் என்று தெரியவருகிறது.
கொழும்பின் ஐந்து நட்சத்திர ஹொட்டல் ஒன்றில் நேற்றுமாலை குறித்த விருந்துபசார நிகழ்வு நடத்தப்படவிருந்தது.
எனினும், நாட்டில் நிலவும் கோவிட் நிலைமை காரணமாக குறித்த நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இருப்பினும், திருமண ஆராதனை, தேவாலயம் ஒன்றில் நெருங்கிய உறவினர்களின் பங்கேற்புடன் கடும் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு மத்தியில் நடைபெறவுள்ளது என்றும் தகவல்கள் கூறுகின்றன. (த-இ)

## வல்வெட்டித்துறையில் ஞாயிறன்று குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஓக. 13
குருதி வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு தற்கால சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி குருதித்தான முகாம் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையின் சிகிச்சை நிலைய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை குருதித்தான நிகழ்வு நடைபெறும்.
குருதிக்கொடையாளர்கள் குருதிக்கொடை வழங்குமாறு போதனா மருத்துவமனையின் குருதி வங்கியினர் கேட்டுக்கொள்கின்றனர். (த)

## 'லாப் காஸ்'

363 ரூபாவால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய, 12.5 கிலோகிராம் 'லாப்காஸ்' சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் புதிய விலை ஆயிரத்து 856 ரூபாவாகும்.
'லாப்காஸ்' நிறுவனம் எரிவாயு விலை அதிகரிப்புக்கு பல மாதங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தபோதும் அரசு அதனை நிராகரித்திருந்தது. இதனையடுத்து தனது உற்பத்தியை அந்த நிறுவனம் நிறுத்தியிருந்தது. அரசின் லிட்ரோ நிறுவனம் ஊடாக எரிவாயு தட்டுப்பாடு சமாளிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர்கள் தெரிவித்திருந்தனர். ஆனாலும் நாடு முழுவதும் எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து அரசு விலை அதிகரிப்புக்கு இணங்கியுள்ளது. (ஒ.இ)

### தவறவிடப்பட்டது

செம்பாட்டுபிள்ளையார் கோயிலுக்கும் நீர்வேலி சந்திக்கும் பருத்தித்துறை வீதிக்கும் இடையில் நேற்று (07.00 pm - 9.00 pm) 956553938 V எனும் அடையாள அட்டை இலக்கமுடைய டொமினிக்கா மாலன் கிளிபர்ட் என்பவருடைய கைபை (பேஸ்) தவறவிடப்பட்டுள்ளது. (30.000 ரூபா பணம், வங்கி அட்டை, வங்கி புத்தகம், அடையாள அட்டை)
தொடர்பு: 077 034 3931

### On-line Free Classes
ZOOM / MICROSOFT TEAM

- DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
- DIPLOMA IN SINGALAM
- DIPLOMA IN ICT

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ்
ஆரம்பம் : 14.08.2021, 10.00 AM

குறிப்பு:
★ புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளபடவுள்ளனர் பிரிவு - V
★ Student's Record book இணை 25.08.2021 இனுள் பெற்றுக்கொள்ள முடியும்.
★ ஆர்வமுடையவர்கள் Viber, Whatsapp ஊடாக இணைந்து கொள்ள முடியும்.

IPS to your future
On-line Education Center Jaffna.
021 424 0229 / 076 685 2529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாட்டை...

நாட்டை முடக்குமாறு பல தரப்பினரும் அரசுக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளனர். கொரோனா செயலணியின் கூட்டம் வழமையாக வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் நிலையில் நேற்று விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. நேற்று மாலை ஆரம்பித்த கலந்துரையாடல் முன்னிரவு வரை நீடித்தது. இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற சுகாதாரத் தரப்பினர் நாட்டை முடக்காவிட்டால் உயிரிழப்புக்கள் உச்சத்தை தொடும் என்று எச்சரித்துள்ளன. ஆகக் குறைந்தது ஒரு மாதத்துக்காவது நாட்டை முடக்கவேண்டும் என்று அரசுக்கு கடுமையான அழுத்தத்தை பிரயோகித்துள்ளன.

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் பெருமளவு தொற்றுக்குள்ளாவதால் எதிர்காலத்தில் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும் என்று சுட் டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமை நீடித்தால் மருத்துவக் கட்டமைப்பு முடங்கும் அபாயம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், கடும் வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றுள்ளன. நாட்டை முடக்கும் தீர்மானத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆதரிக்கவில்லை. இதனால் உறுதியான தீர்மானம் எதுவும் நேற்றைய கலந்துரையாடலில் எட்டப்படவில்லை.

இதேவேளை, கொரோனாத் தடுப்புச் செயலணியின் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதன்போதே இறுதி முடிவுகள் எட்டப்பட்ட வாய்ப்பு இருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ.5,22)

### ஒரேநாளில்...

சென்று கொண்டிருக்கின்றது. அந்த வகையில் நாளொன்றில் அதிகப்படியான கொரோனாச் சாவுகள் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளன. 156 பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் மாத்திரம் 3 ஆயிரத்து 39 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் பதிவான கொரோனாக் காவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 620 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் சாவடைந்த 156 பேரில் 87 ஆண்களும், 69 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 13 பெண்கள், 22 ஆண்கள் என்று 35 பேர் 30 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 121 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில், 56 பெண்களும், 65 ஆண்களும் அடங்குகின்றனர். (ஒ.22)

### வடக்கில்...

வவுனியாவில் 72 வயதுடைய ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை உயிரிழந்த மூவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கும், அராலியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும், முல்லைத்தீவு மல்லாவியைச் சேர்ந்த ஒருவருக்குமே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5,19,26,110)

### வடக்கில் 301...

ணர். பி.சி.ஆர். சோதனைகளின் ஊடாக 102 பேரும், அன்டிஜென் சோதனை ஊடாக 199பேரும் கண்டறியப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 373பேரின் பி.சி.ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது 90பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் இருவர் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள்.

ஏனையோரில், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 7பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 12பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 20 பேருக்கும், நொதேர்ன் சென்றல் மருத்துவமனையில் ஒருவருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பளை பிரதேச மருத்துவமனையில் 6பேருக்கும், அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 13பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 170பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 18 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 4 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களைச் சேர்ந்தவர்கள். எஞ்சியோரில் உடுவிலில் 3 பேருக்கும், நல்லூரில் 8 பேருக்கும், பளையில் 3 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில், கோப்பாயில் 4பேருக்கும், வேலணையில் 5பேருக்கும், சங்கானையில் 27பேருக்கும், பருத்தித்துறையில் 4பேருக்கும், மருதங்கேணியில் ஒருவருக்கும், ஊர்காவற்றுறையில் 3பேருக்கும், நல்லூர், உடுவில், யாழ்ப்பாணத்தில் தலா 8 பேருக்கும், காரைநகரில் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 127 பேருக்கு அன்டிஜென் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

### அபாய....

அவர் பொது மக்கள் பொறுப்புடன் நடந்துகொண்டால் மாத்திரமே தொற்று பரவலை கட்டுப்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார். (ஒ.214)

### சாப்பாடா...

னிக்க வேண்டும். இவ்வாறு சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளரான பேராசிரியர் மருத்துவர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை விடுத்தார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பாக அடுத்த இரண்டு மூன்று வாரங்கள் இலங்கைக்கு மிகவும் தீர்மானமிக்கவை. சீனாவின் வூகான் மாநிலத்தை விடவும் இரண்டு மடங்கு வேகத்தில் இங்கு தொற்றுப் பரவுகின்றது. இவ்வாறான நேரத்தில் நாங்கள் 5 விநாடிகளுக்கு முகக்கவசம் அணியாமல் இருந்தால் கூட நமக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. இதனால் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இதேவேளை, எதிர்காலத்தில் நம்மிடையே உணவு இன்றி இறப்பதா? ஒட்சிசன் இன்றி இறப்பதா? என்ற கேள்விகள் எழலாம். ஆனால், உணவு இல்லாவிட்டால் இருப்பவர்கள் எமக்கு வழங்குவர். ஒட்சிசன் இல்லாவிட்டால் எம்மால் வாழவே முடியாது போகும். இதனால் இது தொடர்பில் தீர்மா ணங்களை அரசு எடுக்க வேண்டும், என்றார். (ஒ.22)

### பிறந்தநாள்...

டாட்டத்தில் ஈடுபட்ட போது வாளுடன் நுழைந்த வன்முறைக் கும்பல் அட்டூழியத்தில் ஈடுபட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது. நேற்று மாலை இந்த சம்பவம் நடைபெற்றது. நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள கிறீம் கவுஸின் வெளிப்புறத்தில் சுமார் 10 வரையான இளைஞர்கள் குழு கேக் வெட்டி, பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட தயாராகியது. மோட்டார் சைக்கிளில் கேக் வைக்கப்பட்டிருந்தது.

அப்போது 2 மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் வந்த 4 வன்முறையாளர்கள், கேக்கை வாளால் வெட்டி சேதப்படுத்தினர். இதில் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது. வன்முறைக் கும்பல் நுழைந்ததும் இளைஞர்கள் தலைதெறிக்க தப்பியோடி விட்டனர். அட்டூழியத்தில் ஈடுபட்ட வன்முறைக் கும்பல் கேக் வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு சென்றுள்ளது. (ஒ.இ)

### கல்வியங்காட்டில்...

கிழமை இரவு 6.40 மணிக்கு இனந்தெரியாத அடாவடிக் கும்பல் பெற்றோல் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தி யுள்ளது. அத்துடன் கடையின் கண்ணாடிகளை வாளால் அடித்து நொருக்கியுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி மீது இலக்கம் மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத வாள்வெட்டு கும்பல் பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தியதோடு அங்காடி கண்ணாடிகளை வாளால் அடித்து நொருக்கி சேதப்படுத்திச் சென்றுள்ளது. (ஒ.26)

### 40 பேர்ச்...

ருந்து மேற்படி காணியை ஆக்கிரமித்து இராணுவத்தினர் முகாம் அமைத்திருந்தனர். அதனை விடுவிக்க பல அழுத்தங்கள் கடந்த காலங்களில் விடுக்கப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லை. இந்த நிலையில் நேற்றைய தினம் அந்தக் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. தனிநபர் ஒருவருக்குச் சொந்தமான காணியையே இராணுவத்தினர் நேற்று விடுவித்தனர்.

57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயவர்த்தன, கரைச்சிப் பிரதேச செயலர் பா. ஜெயகரனிடம் காணி விடுவிப்புக்கான ஆவணத்தை உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தார். பல ஏக்கர் காணிகளை இன்னமும் தம்வசம் வைத்துள்ள இராணுவத்தினர், ஜெனிவா அமர்வு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் 40பேர்ச் காணி விடுவிப்பை பெரும் நிகழ்வாக நடத்தி முடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,214)

### குடைசாய்ந்தது....

பாணம் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸே விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் வீதிப் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில், பஸ் வேகமாக பயணித்த போது சறுக்கி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.4,20)

### நல்லைக்...

மாக பக்தர்கள் ஆலயத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்த நிலையில் ஆலயப் பெருந்திருவிழாவை வீடுகளிலிருந்தே பார்வையிடுவதற்குரிய ஒழுங்குகள் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆலயத்தின் Nallur Kandaswamy Devasthanam என்ற 'யூடியூப்' அலைவரிசை ஊடாகப் பார்வையிட முடியும். (ஒ.5)

### சோதனைக்...

அன்டிஜன் பரிசோதனைகளுக்கு அதிகபட்ச கட்டணத்தை அறிவிக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஆகக்கூடிய கட்டணமாக 6 ஆயிரத்து 500 ரூபாவும் அன்டிஜன் பரிசோதனைக்கு ஆகக்கூடிய கட்டணமாக 2 ஆயிரம் ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

### விபத்தில்...

மனையில் சிகிச்சைபெற்று வந்த இளைஞன் நேற்று உயிரிழந்துள்ளார். தியேட்டர் வீதி இணுவிலைச் சேர்ந்த தங்கராசா பிறின்சன் (வயது - 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி மருதனார்மடத்துக்கு பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்றுள்ளார். ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு ஏறும்போது, மருதனார்மடத்திலிருந்து இணுவிலை நோக்கி ஆடு ஏற்றி வந்த பட்டா வாகனத்தின் சாரதி பொலிஸாரைக் கண்டதும் வலப்பக்கமாக வாகனத்தை திருப்பியுள்ளார். பட்டா வாகனத்தின் கண்ணாடியுடன் துவிச்சக்கரவண்டியில் பயணித்த பிறின்சன் மோதியுள்ளார். இவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். (ஒ.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வீதமான ரசிகர்கள் ஐ.பி.எல்லில் அனுமதி?

சென்னை, ஓக. 13

**ஐ.பி.எல் தொடரின் இரண்டாவது பாதியில் 50 வீதமான பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரியவருகின்றது. எனினும் இது தொடர்பான எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிரிக்கெட் சபை விடுக்கவில்லை.**



இந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடர் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. இந்தியாவில் இடம்பெற்ற இந்தத் தொடரில் ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. கொரோனா தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு ரசிகர்கள் இல்லாமல் தொடர் நடத்தப்பட்டது. எனினும் வீரர்களின் பயோ பபுள் வளையத்துக்குள் கொரோனா ஊடுருவியதை அடுத்து தொடர் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் தொடரின் இரண்டாவது பாதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் பங்கெடுப்பதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஏற்கனவே ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ள நிலையில் ஏனைய அணிகள் அங்கு பயணப்படத் தயாராகி வருகின்றன. இத்தகையதொரு பின்னணியிலேயே ஐ.பி.எல் தொடரின் இரண்டாவது பாதியில் ரசிகர்களின் பங்கெடுப்பு தொடர்பான அறிவித்தல் வந்துள்ளது. இதன்படி, கொவிட் தொற்றுக்கான இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்கள் ஆட்டத்தைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள். 50 வீதமான பார்வையாளர்களுடன் ஆட்டம் நடத்தப்படும் என்று முதல் கட்டத் தகவல் வெளிவந்துள்ளது. எனினும் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிரிக்கெட் சபை விடுக்கவில்லை. (ம)



## புள்ளிக் குறைப்பு: கோலி அதிருப்தி

லண்டன், ஓக. 13

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தாமதமாகப் பந்து வீசியமைக்காக இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு இந்திய அணியின் தலைவர் கோலி அதிருப்தி தெரிவித்தார்.

டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் புள்ளிகள் என்பவை மிக முக்கியம். முதலாவது ஆட்டத்தில் மழையுடன் கணிசமாகப் போராட வேண்டியிருந்தது. இந்த நிலையில் தாமதமான பந்துவீச்சு கணிக்கப்பட்டமையும் அதற்கு புள்ளிக்குறைப்பு வழங்கப்பட்டமையும் உண்மையில் அதிருப்தி தருகின்றது - என்றார். (ம)

## ஆப்கானிஸ்தானை கைவிடாதீர்கள் ரசிட்கான் உருக்கமான கோரிக்கை

காபூல், ஓக. 13

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே உச்சக்கட்டப் போர் இடம்பெற்றுவரும் நிலையில், 'ஆப்கானிஸ்தானைக் கைவிட்டுவிடாதீர்கள்' என்று கோரிக்கை விடுத்துள்ளார் பிரபல கிரிக்கெட் வீரரான ரசிட்கான்.


தலிபான்களின் கரங்கள் ஆப்கானிஸ்தானில் ஓங்கி வருகின்றன. அவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதியில் பெண்ணடிமைத்தனமும் துன்புறுத்தல்களும் மிகையாக அதிகரித்துவரும் நிலையில் இந்தக் கோரிக்கையை ரசிட்கான் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ரசிட்கான் தனது ருவிற்றரில்,

அன்பார்ந்த உலகத் தலைவர்களே! என்னுடைய தேசம் முழுமையான நிர்வாக சீர்கேட்டில், குழப்பத்தில் இருக்கிறது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள், குழந்தைகள், பெண்கள் நாள்தோறும் துப்பாக்கி குண்டுகளுக்கு உயிரிழக்கின்றனர்.

எங்கள் மக்களின் வீடுகள், சொத்துக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் புலம்பெயர்ந்துள்ளார்கள். எங்களை பெரும் குழப்பத்திலும், முழுமையான சீர்கேட்டிலும் கைவிட்டுவிடாதீர்கள்.

ஆப்கானிஸ்தான் மக்களைக் கொல்வதை நிறுத்துங்கள், ஆப்கானிஸ்தானை அழிப்பதை நிறுத்துங்கள். எங்களுக்கு அமைதி தேவை' என உருக்கமாகத் தெரிவித்துள்ளார். (ம)



## நியூசிலாந்தின் முன்னாள் வீரர் கெய்ன்ஸ் உடல்நிலை மோசம்



வெலிங்டன், ஓக. 13

நியூசிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கெய்ன்ஸின் உடல்நிலை மோசமாகியுள்ளது என்று நியூசிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியில், 1989 முதல் 2006ஆம் ஆண்டு வரை முக்கிய வீரராக விளங்கியவர் கிறிஸ் கெய்ன்ஸ். 62 டெஸ்ட் போட்டி, 215 ஒருநாள் போட்டிகள், இரண்டு ரி20 போட்டிகளில் பங்கேற்றுள்ள கெயின்ஸ் பல்வேறு போட்டிகளில் நியூசிலாந்து வெல்ல காரணமாக விளங்கியவர்.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற இவர் வறுமை காரணமாக கனரக வாகனப் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றினார். இந்த நிலையில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த கிறிஸ் கெயின்ஸ், திடீரென மயங்கி விழுந்தார். இதனால் கான்பெர்ரா மருத்துவமனையில் அவரை சேர்த்தனர். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரது உடல் நிலை கவலைக்கிடம் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




## உடனடியாக வேலை ஆட்கள் தேவை

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் உள்ள பல்பொருள் அங்காடியில் காசாளராக வேலை செய்வதற்கு A/L படித்த பெண் ஒருவரும் உதவியாளராக வேலை செய்வதற்கு ஆண் ஒருவரும் தேவை. நல்லூருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு : 076 770 7555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.